# வானவில்

# VAANAVIL

| இதழ்123 | பங்குனி 2021 |
|---|---|
| ISSUE 123 | MARCH 2021 |


# கிழக்கு-மேற்கு பிளவை எடுத்துக் காட்டிய மனித உரிமைப் பேரவைத் தீர்மானம்!




மார்ச் 23ஆம் திகதி ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் பிரித்தானியா, கனடா, மேற்கு ஜெர்மனி உள்ளிட்ட மேற்குலகின் பலம் வாய்ந்த வலதுசாரி முதலாளித்துவ நாடுகளால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

வாக்களிக்கத் தகுதி பெற்ற 47 நாடுகளில் 22 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளன. தீர்மானத்தை எதிர்த்து 11 நாடுகள் வாக்களித்துள்ளன. 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அதாவது, 47 நாடுகளில் அரைவாசிக்கும் குறைவான 22 நாடுகளின் ஆதரவுடன்தான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் மூலம் தீர்மானம் கொண்டு வந்தவர்களின் நோக்கம் உண்மையில் தோல்வி கண்டுள்ளது.

தீர்மானத்தை கொண்டு வந்த நாடுகளும், அதை ஆதரித்து வாக்களித்தவர்களும், மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளும், அவற்றிற்கு வால்பிடிக்கும் பிற்போக்கு நாடுகளுமாகும். அதேநேரத்தில் தீர்மானத்தை எதிர்த்த நாடுகளில் சீனா, ரஸ்யா, கியூபா, வெனிசூலா போன்ற சோசலிச நாடுகளும், ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளும் உள்ளடங்குகின்றன.

வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளில் இந்தியா, யப்பான், இந்தோனேசியா போன்ற ஆசிய நாடுகள் முக்கியமானவை. இந்தியாவின் முடிவு இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும், தமிழ் நாட்டிலும் வாழும் பிற்போக்குத் தமிழ் தேசியர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

ஏனெனில், தமிழ் நாட்டில் தேர்தல் நடைபெற இருப்பதால், அங்குள்ள வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அதிமுகவுடன் தேர்தல் கூட்டு வைத்துள்ள மோடியின் அரசாங்கம் சந்தர்ப்பவாத ரீதியில் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கும் எனப் பலர் நம்பியிருந்தனர். பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் கே.பாலகிருஸ்ணன் கூட இந்தியா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என அறிக்கை வெளியிட்டிருந்தார் என்றால், தமிழ் தேசியர்களின் எதிர்பார்ப்பு எப்படியிருந்திருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஆனால், இந்திய முதலாளித்துவ விஸ்தரிப்புவாத அரசைப் பொறுத்தவரையில், ஒரு மாநிலத் தேர்தலில் வெற்றி பெறுவதைவிட, அயல் நாடொன்றைப் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது அதன் பூகோள அரசியலுக்கும், யுத்த தந்திரத்துக்கும் முக்கியமானது என்பதை உணர்ந்தபடியால்தான், இலங்கைக்கு எதிராக வாக்களிக்காமல் தவிர்த்திருக்கிறது என்பதுதான் உண்மை. இந்த விடயம் கிணற்றுத் தவளைகளாக இருந்து கொண்டு வானத்தை அளவிடும் தமிழ் தேசியர்களுக்கு ஒருபோதும் விளங்கப் போவதில்லை.

இந்தத் தீர்மான வாக்களிப்பின் போது இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் அவதானிக்க முடிந்தது. அதாவது, 47 நாடுகளில் 9 நாடுகள் ஆசிய நாடுகள். ஆனால் அமெரிக்க கைப்பொம்மையான தென் கொரியாவைத் தவிர வேறெந்த ஆசிய நாடும் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கவில்லை. வருங்கால உலகம் ஆசியாவில்தான் தங்கியிருக்கிறது என்ற யதார்த்தத்தை வைத்துப் பார்க்கும் பொழுது, தற்பொழுதே உலகம் மேற்கு கிழக்காக பிரிந்து நிற்பது துல்லியமாகத் தெரிகிறது.

‘இலங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# மியான்மார் இராணுவ ஆட்சிக்கெதிராக தொடரும் போராட்டம்

கடந்த பெப்ரவரி 1ந் திகதி இராணுவத்தினரால் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டு அவசரநிலையைப் பிரகடனப்படுத்தி, மியான்மாரில் அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியது. 75 வயதான ஆங் சான் சூகி (Aung San Suu Kyi) மற்றும் ஜனாதிபதி வின் மிண்ட் (Win Myint) உட்பட முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். இதனையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் அரசியல் தலைவர்களை விடுவிக்கக்கோரியும், அமைதியாக போராடி வரும் மக்கள் மீது, இராணுவ வீரர்களும் பொலிசாரும் கொடூரத் தாக்குதல் நடாத்தி வருகின்றனர். இதில் 20 சிறுவர்கள் உட்பட, 320 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளதுடன், ஏறத்தாள 2500 பேர் வரையில் கைது செய்யப்பட்டுமுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு நவம்பரில் மியான்மாரில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய நாடாளுமன்றம் திறக்க இருந்தது. இத்தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சிக்கு (National League for Democracy - NLD) 83 சதவீத வாக்குகள் கிடைத்தன. இதன்மூலம் அவர்களுக்கு மக்களவையில் மொத்தம் உள்ள 310 இடங்களில் 258 இடங்களும், தேசிய இனத்தினர் அவையில் மொத்தம் உள்ள 168 இடங்களில் 138 இடங்களும் கிடைத்தன. இராணுவம் தூக்கிப்பிடித்த Union Solidarity and Development Party வெறும் 5.9 சதவீத வாக்குகளைப் பெற்றதால் மக்களவையில் 26 இடங்களையே பெற்றனர். தோல்வியைத் தாங்க முடியாத இராணுவம் இந்தத் தேர்தலில் மோசடி நடந்ததாகக் குற்றம்சாட்டியே மேசமான ஆட்சிக்கவிழ்ப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறது.

52 வருடங்களாக மியான்மாரில் இராணுவ ஆட்சி நிலவி வருகின்றது. இராணுவமே மிகப்பெரும் வலிமை வாய்ந்த அமைப்பு. சட்டம், பொருளாதாரம், அரசாங்கம் என்று மக்கள் வாழ்வின் எல்லா அம்சங்களும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது. இராணுவம் அதிகாரத்துடன் சேர்த்து செல்வச் செழிப்பிலும் வாழ்ந்து வருகிறார்கள். இராணுவத்தின் உயர் அதிகாரிகளில் பலர் நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் பல வர்த்தக நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள். விலைமதிப்பு மிகுந்த கற்கள், மரங்கள் கனிம வளங்கள் போன்ற பல இலாபகரமான துறைகளை இராணுவ ஜெனரல்களும், பல்வேறு முன்னாள் இராணுவ அதிகாரிகளும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறார்கள்.

ரோஹிங்கியா முஸ்லீம் மக்களுக்கு எதிரான படுகொலையை கண்டிக்காது, இராணுவத்தின் பக்கம் சார்ந்து நின்றதால், 1991 இல் ஆங் சான் சூகிக்கு வழங்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசினை மீளப்பெற வேண்டுமென்றளவிற்கு அவர் மேற்கு நாடுகளின் கண்டனத்திற்குள்ளாகி இருந்தார். எனினும் அவருடைய சொந்தநாட்டில் அவரது செல்வாக்கு பன்மடங்கு அதிகரித்து வந்தது. ஆங் சான் சூகி அதிபராக வரக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக, வெளிநாட்டவர்கள் குடும்ப உறுப்பினர்களாக இருந்தால் அதிபர் பதவிக்கு வர முடியாது என்ற விதிமுறையை இராணுவம் விதித்தது. சூகியின் கணவர் ஒரு பிரித்தானியர். இதற்காக NLD கட்சி State Councillor என்றதொரு புதிய பதவியை சூகிக்காக உருவாக்கி அவருக்கு போதிய அதிகாரங்களை வழங்கியது.

இராணுவத்துக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு சுமார் 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என்று மியான்மார் இராணுவம் எச்சரிக்கை விடுத்தது. அத்துடன் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் நடந்துகொண்டால் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும் மக்கள் இந்த இராணுவ மிரட்டலுக்கு அடிபணியாமல் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். பாதுகாப்பு படைகளால் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, NO PEOPLE PROTEST என்ற பெயரில் மக்கள் பங்கேற்காத நூதன போராட்டத்தை இளைஞர்கள் நடாத்திக் காட்டினர். சிறையிலுள்ள தலைவர்களை விடுவித்து, சர்வாதிகாரத்தை ஒழித்து, ஜனநாயக ஆட்சி திரும்ப வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய ஏராளமான பதாகைகளை மாத்திரம் வீதிகளின் மருங்கில் வைத்து போராட்டத்தை நடத்தினர்.

இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களின் போது ஏழு வயது சிறுமி ஒருவர் மாண்டலே (Mandalay) என்ற நகரில் 23.03.2021 அன்று பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரது சொந்த வீட்டில் வைத்தே அச்சிறுமி துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகியுள்ளார். மியான்மார் இராணுவத்தினர் அந்தச் சிறுமியின் தந்தையை நோக்கிச் சுட்டதாகவும், அப்போது அவரது மடியில் அமர்ந்திருந்த சிறுமி மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததாகவும் Myanmar Now என்ற உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மியான்மாரில் 135 இற்கு மேற்பட்ட இனக்குழுக்களும், குறைந்தது 30 ஆயுதமேந்திய குழுக்களும் உள்ளன. நாட்டின் எல்லைப்பகுதிகளில், பல தசாப்தங்களாக சுயநிர்ணய உரிமைகளுக்காக ஆயுதமேந்திப் போராடி வரும் இனக்குழுக்களும் தற்போது இராணுவத்திற்கு எதிரான தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதால், நிலைமை மிக மோசமடைந்துள்ளது. மியான்மாரின் சீன எல்லையில் உள்ள கச்சின் (Kachin) மாநிலத்தில் இயங்கும் கச்சின் சுதந்திர இராணுவம் (Kachin Independence Army - KIA), 1961 முதல் சுயநிர்ணய உரிமைக்காக போராடி வருகிறார்கள். இந்த அமைப்பு தற்போது ஒரு புதிய முன்னணியாக வேகமாக வளர்ந்து வருகிறது. பெப்ரவரி மாதத்திலிருந்து, KIA இற்கும் 'டாட்மாடா' (Tatmadaw) என அழைக்கப்படும் மியான்மார் இராணுவத்திற்கும் இடையிலான மோதல்கள், சீன எல்லையிலுள்ள வடக்கு ஷான் (Shan) மாநிலத்தில் தினமும் நிகழ்ந்து வருகின்றன.

மியான்மாரின் இராணுவ ஆட்சி அகற்றப்படாத வரையில், அந்நாட்டிலுள்ள சகல இன மக்களும் சுபீட்சமாக வாழ முடியாது. எனவே மியான்மார் மக்களின் ஜனநாயகத்திற்கும் சுயநிர்ணய உரிமைகளுக்குமான போராட்டங்களுக்கு முழு ஆதரவினையும் ஒருமைப்பாட்டையும் தெரிவிக்க வேண்டியது எமது சர்வதேசக் கடமையாகும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

**வானவில்**

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# ஐரோப்பாவில் அமெரிக்கா மற்றும் நேட்டோவின் அபாயகரமான யுத்ததந்திரம்!



நேட்டோவின் Dynamic Manta நீர்மூழ்கி எதிர்ப்பு யுத்தப் பயிற்சி லோனியன் (Lonian) கடலில் பெப்ருவரி 22 முதல் மார்ச் வரை நடைபெற்றுள்ளது. அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஸ்பெயின், பெல்ஜியம், துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து கப்பல்கள், நீர்மூழ்கிகள், விமானங்கள் என்பன இந்நிகழ்வில் பங்குபற்றின. இந்தப் பயிற்சியில் இரண்டு பிரதான பிரிவுகளான அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் வகுப்பு அணுசக்தி தாக்குதல் நீர்மூழ்கியும், பிரான்சின் சாள்ஸ் டீ கோல் விமானந்தாங்கி கப்பல் தனது போர்க் குழுவுடனும் இந்தப் பயிற்சியில் பங்குபற்றியதுடன், ஒரு அணுசக்தி தாக்குதல் நீர்மூழ்கியும் இதில் இணைக்கப்பட்டிருந்தது.

பயிற்சி முடிந்த கையோடு சாள்ஸ் டீ கோல் விமாந்தாங்கி கப்பல் பாரசீக வளைகுடாவுக்குச் சென்றுள்ளது. இந்தப் பயிற்சியில் பங்குபற்றிய இத்தாலி முழுப் பயிற்சியினதும் “வரவேற்பு நாடாக” இருந்துள்ளது. சிசிலியில் உள்ள கற்றானியா என்ற இடத்திலுள்ள கடற்படை தளத்தையும், கடற்படை ஹெலிகொப்டர் தளத்தையும் இதில் பங்குபற்றிய படைகளுக்கு இத்தாலி ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது. மத்தியதரைக் கடற் பிராந்தியத்தில் சிசிலியில் அமைந்துள்ள அமெரிக்க மற்றும் நேட்டோவின் சிகோனெல்லா விமானத்தளமும், ஒகஸ்ரா தளமும் விநியோகத் தளங்களாகச் செயற்பட்டுள்ளன. நேட்டோ தெரிவித்த தகவலின்படி இந்தப் பயிற்சியின் நோக்கம், ஐரோப்பாவை பயமுறுத்துகின்ற மத்தியதரைக் கடல் பகுதயிலுள்ள ரஸ்ய நீர்மூழ்கிகளை வேட்டையாடுவதாகும்.

அதேநேரத்தில், அந்திலாந்திக் சமுத்திரத்தில் அமெரிக்காவின் ஐசனோவர் விமாந்தாங்கிக் கப்பலும் அதன் போர்க்குழுவும் பயற்சியில் ஈடுபட்டன. அதற்கு அவர்கள் சொன்ன காரணம், “கூட்டாளி நாடுகளுக்கு அமெரிக்க இராணுவ உதவியை வழங்குவதும், கடல்களை சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் வைத்திருப்பதற்குமாகும்” என்பதே. இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட நேபிள்ஸ் மற்றும் கெயிற்றா தளங்களில் இருந்து செயற்படும் அமெரிக்காவின் ஆறாவது கடற்படை, முன்பு நேபிஸ்சில் இருந்த நேட்டோ கட்டளையகத்தின் தலைமை அதிகாரி அட்மிரல் ஃபொக்கோ வகுத்த யுத்ததந்திரத்தின்படியே செயற்பட்டன. இந்தப் பயற்சிக்கு அவர்கள் சொன்ன காரணம், ரஸ்யா அத்திலாந்திக் சமுத்திரத்தின் இரு கரைகளையும் இணைக்கும் தமது நீர்மூழ்கிகளையும் கப்பல்களையும் மூழ்கடிப்பதன் மூலம் ஐரோப்பாவை அமெரிக்காவிலிருந்து தனிமைப்படுத்திவிடும் என்பதாகும். இரண்டு உலக யுத்தங்களுக்கும், பனிப்போருக்கும் பின்னர், “அத்திலாந்திக்கின் நான்காவது யுத்தத்துக்காக” நேட்டோ கட்டாயமாகத் தயாராக இருக்க வேண்டும் என அவர் வாதிடுகிறார். இதேநேரத்தில், “அமெரிக்கா தனது கூட்டாளி நாடுகளுக்கு உதவுவதற்கு வலிமையுள்ளதாக இருக்பதைக் காட்டுவதற்காக” அமெரிக்கா டெக்சாசில் உள்ள தனது யுத்ததந்திர பி-51 குண்டு வீச்சு விமானங்களை, நோர்வேயின் எஃப் - 35 யுத்த விமானங்களுடன் இணைந்து ரஸ்ய எல்லைக்கு அருகிலுள்ள நோர்வே பகுதிக்கு நகர்த்தியுள்ளது.

ஐரோப்பாவிலும் அதனை அண்டிய கடல் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் அமெரிக்க கடற்படை ஜெனரல் ரொட் வோல்ரேர்ஸ் தலைமையினால் வழிநடத்தப்படுகிறது. இவர் அமெரிக்காவின் ஐரோப்பிய கட்டளையகத்தினதும், அதேவேளையில் நேட்டோவினதும் ஐரோப்பாவினதும் ஒன்றிணைந்த மேல்நிலை கட்டளையகத்தின் தலைவராகவும் இருக்கின்றார். இந்தப் பதவியை அமெரிக்க ஜெனரல் ஒருவரே வகிப்பது வழமை.

**Manlio Dinucci**

இந்த இராணுவ நடவடிக்கைகள் எல்லாம் உண்மையை மறைத்து “ரஸ்ய ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பாவை பாதுகாத்தல்” எனக் காட்டுவதற்கான நோக்கமாகும். நேட்டோ ஐரோப்பாவில் ரஸ்ய எல்லைக்கருகில் அணுவாயுத தளங்கள் உட்பட தனது படைகளை விஸ்தரித்து வருகிறது. பெப்ருவரி 26இல் ஐரோப்பிய சபையில் உரையாற்றிய நேட்டோவின் செயலாளர் நாயகம் ஸ்ரொல்ற்ரென்பேர்க், “பெருந்தொற்று நோய் ஏற்படுவதற்கு முன்னர் நாம் எதிர்நோக்கிய பயமுறுத்தல் நிலை இன்னமும் இருக்கிறது” எனக் கூறி, முதலில் “ரஸ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள்” எனக் குறிப்பிட்டதுடன், அதன் பின்னணியில் “சீனாவின் எழுச்சி” ஆபத்தானது எனக் குறிப்பிட்டார். பின்னர் அவர், அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் தூரஅத்திலாந்திக் தொடர்பை

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# மத்திய வங்கி நிதி மோசடி சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்!

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ரவி கருணநாயக்க உட்பட 8 பேரை மத்திய வங்கி நிதி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் மார்ச் இறுதி வரை விளக்கமறியலில் வைத்துள்ளது.

ரணில் – மைத்திரி கூட்டு நடத்திய 'நல்லாட்சி' காலத்தில் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 மற்றும் 31ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி ஏலத்தினை முறைகேடாகப் பயன்படுத்தியதின் மூலம், அரசாங்கத்துக்கு சுமார் 3,689 கோடி ரூபாய் இழப்பை ஏற்படுத்தியதாக குறித்த சந்தேக நபர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரிப்பதற்காக மூவரடங்கிய விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்கவுடன், பேர்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைவர் ஜெப்ரி அலோசியஸ், பணிப்பாளர்களான கசுன் பலிசேன, சித்த ரஞ்சன் ஹூலுகல்ல என்போரும், மத்திய வங்கியின் இரு அதிகாரிகளான எஸ்.பத்மநாதன், இந்திக சமன் குமார என்போரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

இந்த இலங்கை மத்திய வங்கி பிணை முறி வழக்கின் பிரதான சூத்திரதாரியான வங்கியின் முன்னாள் ஆளுநரும், அப்போதைய பிதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவுமான அர்ஜூனா மகேந்திரன் கைது செய்யப்படுவதற்கு இடம் கொடுக்காமல் சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்று மறைந்து வாழ்கிறார்.

அவரைக் கெது செய்வதற்கு சர்வதேச 'இன்டர்போல்' அமைப்பின் ஊடாகவும், சிங்கப்பூர் அரசாங்கத்தின் மூலமாகவும் பல முயற்சிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட போதும், குறிப்பிட்ட நபர்களின் போதிய ஒத்துழைப்பின்மை காரணமாக மகேந்திரன் தப்பித்து வருகின்றார்.

# அதிகாரிகளின் அடாத செயலை தடுத்து நிறுத்திய அமைச்சர்!

மார்ச் 17ஆம் திகதி கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சி யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அந்தக் கூட்டத்தில் வைத்து ஒரு முக்கியமான விடயம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது, சில பொறுப்பற்ற அரச அதிகாரிகள் யாழ் மாவட்ட செயலகத்தில் இருந்த காணி சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தையும் சில வாரங்களுக்கு முன்னர் இரவோடு இரவாக அனுராதபுரத்துக்கு எடுத்துச் சென்றிருந்தனர். அதனால் வட பகுதி மக்கள் தமது காணி சம்பந்தமான தேவைகளுக்கு அனுராதபுரம் செல்ல வேண்டிய சிரமமான நிலைமை ஏற்பட்டிருந்தது.

போர்க்காலத்தில் இந்த ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக அனுராதபுரம் எடுத்துச் சென்றிருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். போர் முடிந்து சிவில் நிர்வாகம் முழுமையாகச் செயல்படும் இன்றைய காலகட்டத்தில் சில அதிகாரிகள் இவ்வாறு செய்வது, அவர்களது இனவாதச் செயல்பாட்டை அல்லது மக்களை வீணாக அலைக்கழிக்கும் அதிகாரத்துவத் திமிரைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இந்த விடயத்தை அறிந்து கொண்ட அமைச்சர் மகிந்தானந்த கோபமடைந்ததுடன், அனுராதபுரத்துக்கு எடுத்துச் சென்ற காணி ஆவணங்களை உடனடியாக மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரும்படி ஆணையிட்டதால், அவை திரும்பவும் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

இந்தச் சம்பவம் பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சர், சில அதிகாரிகளின் இந்த மாதிரியான தவறான நடவடிக்கைகளால் பொதுமக்கள் மத்தியில் அரசாங்கம் பற்றி தவறான கருத்து ஏற்படுகின்றது என்று கவலை தெரிவித்தார்.

அரசாங்கம் மாறினாலும், உண்மையான அரசு இயந்திரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகார வர்க்கம் மாறுவதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணமாகும்.

# கனடாவில் பெரும்பான்மையோர் பிரித்தானிய முடியரசின் கீழ் இருப்பதை விரும்பவில்லை!

பிரித்தானிய இளவரசர் வில்லியமும் அவரது மனைவி மேஹனும் அரச குடும்பம் பற்றி அண்மையில் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டி உலக மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் பேட்டியைத் தொடர்ந்து பிரித்தானிய முடியரசு சம்பந்தமாக கனடிய மக்களிடையே இணையத்தளம் வாயிலாக 'கனடிய கற்கைகளுக்கான அமைப்பு' என்ற நிறுவனம் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது.

அந்தக் கருத்துக் கணிப்பில் 53 சத வீதமான கனடிய மக்கள் 'பிரித்தானிய முடியாட்சி என்பது மிகவும் தொன்மையானது, 21ஆம் நூற்றாண்டில் அது தொடர்வது சரியானது அல்ல, எனவே அது ஒழித்துக் கட்டப்பட வேண்டும்' எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கருத்துத் தெரிவித்தவர்களில் 59 வீதமானோர், இளவரசர் வில்லியம் மற்றும் அவர் மனைவி மேஹன் மீது அனுதாபத்தை வெளியிட்டுள்ளனர். அதேநேரத்தில், 26 வீதமானோர் அரச குடும்பத்தின் மீது கூடுதலான அனுதாபத்தை வெளிப்படுத்தினர்.

கருத்துத் தெரிவித்த 43 சத வீதமானோர், சம்பவங்களைப் பார்க்கையில் அரச குடும்பம் பின்பற்றும் இனவாத நிலைப்பாட்டினை எடுத்துக் காட்டுவதாகவும், அதனால் அரச குடும்பத்தின் பிம்பத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

கனடாவின் பிரெஞ்சு மொழி பேசும் மாகாணமான கியுபெக்கின் மக்களில் 71 வீதமானோர் முடியாட்சி காலம் கடந்த ஒன்று எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எப்படியிருப்பினும், கனடிய சனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசிப்பேர், கனடா தொடர்ந்தும் பிரித்தானிய முடியாட்சியின் கீழ் இருக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் வூஹான் நகரில் வாழும் ஓர் ஈராக்கியரின் அனுபவங்கள்!

"நான் (கம்கீன் இசற் ரசீத் - Ghamgeen Izat Rashed) ஈராக்கின் சுலேமானியா (Sulaymaniyah) நகரத்தைச் சேர்ந்தவன். ஆனால் கடந்த 17 வருடங்களாக சீனாவின் வூகான் எனது வீடாக இருக்கின்றது. அது, சீனாவின் ஹூப்பே மாகாணத்தில் பிறந்த எனது 8 வயது மகளான ஹூ யாங் அபுவின் (Hu Yang Abu) வயதைவிடக் கூடுதலான காலமாகும்.

நான் புலமைப்பரிசில் பெற்று வூகானில் கலாநிதிப் படிப்பை மேற்கொள்வதற்கான ஒரு மாணவனாக இங்கு வந்தேன். நான் குவாஸோங் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் மின் எந்திரவியலில் பட்டம் பெற்ற பின்னர் இங்கேயே தங்கி, வூஹான் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு, பட்டப் பின்படிப்பு மற்றும் கலாநிதிப்பட்ட மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றேன். எனது மனைவி ஹூ சாங்லி (Hu Changli) ஒரு வூஹான் யுவதி. பாருங்கள், இந்த நகரம் எனக்கு காதலையும் சந்தோசமான ஒரு வாழ்க்கையையும் தந்திருக்கிறது.

கொவிட் – 19 இந்த நகரைத் தாக்கிய பொழுது, இங்கிருந்த பல வெளிநாட்டவர்கள் வெளியேறத் தொடங்கிய போதிலும், நாம் ஏன் வெளியேறவில்லை? ''நாங்கள் இங்கு தனிமையாக இல்லை'' என நான் எனது குடும்பத்தினரிடம் கூறினேன். "இங்குள்ள 11 மில்லியன் மக்களும் இங்கிருந்து ஓடத் தொடங்கினால், அப்பொழுது நாங்களும் அவ்வாறு செய்வோம்'' என்றும் கூறினேன்.

நான் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்ததால், எதற்கும் கவலைப்படவில்லை. அவர்கள் முகாமைத்துவத்தில் நம்பமுடியாத அளவுக்கு பலமாக இருந்ததுடன், இந்தப் பிரச்சினையைக் கையாளும் ஆற்றலும் உள்ளவர்கள் என எனக்குத் தெரியும்.

அவர்கள் எப்படி வேலை செய்தார்கள் என்பதைப் பார்ப்போம். இரண்டு வாரங்களுக்குள் இரண்டு விசேட வைத்தியசாலைகள் கட்டப்பட்டதுடன், அங்கு பணி புரிவதற்காக நாடு முழுவதுமிருந்து பல்லாயிரக்கணக்கான வைத்திய ஊழியர்கள் அங்கு கொண்டு வரப்பட்டனர். சமூகங்கள் தமது குடியிருப்பாளர்களைப் பார்த்துக் கொண்டன.



**இணை பேராசிரியர் கம்கீன் இசற் ரசீத், அவர் மனைவி ஹூ சாங்லி மற்றும் அவர் மகள் ஹூ யாங் அபு**

வூஹான் நகர் முடக்கப்பட்ட 76 நாட்களும் நாம் முழுமையாக வீட்டுக்குள் அடைந்து இருந்தாலும், எமது தினசரித் தேவைகள் ஒருபோதும் பாதிக்கப்படவில்லை. சமூக ஊழியர்கள் எமக்குத் தேவையான உணவு மற்றும் எமக்கு அத்தியாவசியமானவற்றை எடுத்து வந்தபொழுது, அவற்றைப் பெறுவதற்காக நான் எமது 11ஆவது மாடியிலிருந்து கீழே சென்றேன். ஆரம்பத்தில் அந்த ஒரு தடவை மட்டுமே நான் அவ்வாறு வெளியே சென்றேன்.

பின்னர் அவர்கள் எம்முடன் நேரடித் தொடர்பு இல்லாத முதல்தர அங்காடி ஒன்றை சமூகத்தில் ஏற்படுத்தியதால் விடயங்கள் இலகுவாகப் போய்விட்டது. நாம் மெச்சும் அளவுக்கு அரசாங்கமும் மக்களும் வேலை செய்ததை உங்களால் கற்பனை பண்ணியும் பார்க்க முடியாது. அத்துடன், வைத்திய ஆலோசனைகளில் இருந்து வேலைத்தலத்திற்கு தொடர்பு கொள்வது வரை, இணையத்தளத்தின் ஊடாகத் தொடர்பு கொள்வதற்குச் செய்த ஏற்பாடு ஒரு விசேட அம்சமாகும்

எனது பல்கலைக்கழகம் வேகமாகச் செயல்பட்டது. இரண்டு வாரங்களுக்குள் எல்லா மாணவர்களுடனும் தொடர்பு கொண்டு இணையத்தளத்தின் ஊடக வகுப்புகளை ஆரம்பித்ததுடன், அதற்கான கட்டணத்தையும் பல்கலைக்கழகமே செலுத்தியது. பெப்ருவரி 17இற்குப் பின்னர் வழமையான வேலையைச் செய்யத் தொடங்கினோம். ஆனால், ஒரு வித்தியாசம் என்னவெனில், வகுப்பறையில் இருந்து படிப்பிப்பதற்குப் பதிலாக வீட்டில் இருந்து படிப்பித்தோம்.

குடிவரவு இலாகாவும் ஒரு வைத்திய அரங்கை உருவாக்கியது. நாம் அதனூடாக தினசரி எமது உடல் வெப்ப நிலையைப் பரிசோதித்து அனுப்பியதுடன், தகவல்களையும் பெற்றோம்.

எனது மனைவி தான் வேலை செய்யும் நிபுணர்களுக்கான பயிற்சி நிறுவனத்து வேலைகளை வீட்டிலிருந்தே செய்ததுடன், எனது மகளும் இணையத்தளம் மூலம் பாடங்களைக் கற்றாள். கடந்த ஏப்ரலில் நகர முடக்கம் விலக்கப்பட்டவுடன் நான் மெதுவாக வாகனத்தைச் செலுத்திக் கொண்டு முதலாவதாக பல்கலைக்கழகத்துக்குச் சென்றேன்.

நாம் தினசரி செய்திகளை அவதானித்து வருகையில், நாட்டின் உயர் ஆலோசனைச் சபையான சீனாவின் தேசிய சபை இரண்டு அமர்வுகளை நடத்துவதை அறிந்தோம். இந்தக் கூட்டங்கள் முக்கியமானவை, ஏனெனில், அவை முக்கியமாக ஒவ்வொரு துறையிலும் நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதுடன், நாட்டை மேலும் திறந்து விடுவதற்கும் திட்டங்களை வகுக்கும்.

இது ஈராக்கிய பாராளுமன்ற கூட்டங்களிலிருந்து பெரிதும் வேறுபாடுடைய ஒன்றாகும். பக்தாத்தில் அரச சபைப் பிரதிநிதிகள் கூடும்போது, மிகவும் குறுகிய காலத்துக்கான ஒரு வருட வரவு செலவு திட்டங்கள் பற்றியே விவாதிப்பார்கள். அவர்கள்

கூடும் பொழுதுதான் கூட்ட நிகழ்ச்சி நிரல் கூட அவர்களுக்குக் கிடைக்கும்.

சீனாவில் நடைபெறும் இரண்டு கூட்டங்களிலும் கால நிர்ணயத்துடன் கூடிய திட்டங்களை அறிவிப்பதுடன், விசேடமாக கடந்த ஐந்து வருடங்களாக நாடு எட்டியுள்ள அபிவிருத்தித் திட்டங்களும் அறிவிக்கப்படும். உலகளாவிய தொற்று நோய்க்கு மத்தியிலும் கடந்த வருடம் வறுமையை முற்றாக ஒழிப்பது என்ற இலக்கை அரசாங்கம் எட்டியுள்ளது.

வூஹானைப் பொறுத்தவரை, நகரம் 2004இல் இருந்த நிலைமையையும், இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் நேரில் கண்ட சாட்சியாக நான் இருக்கின்றேன். பெருந்தொற்று காரணமான பாதகமான சூழ்நிலையிலும் தேசிய மொத்த உற்பத்தியில் வூஹான் 2020இல் நாட்டிலுள்ள 10 முன்னணி நகரங்களில் ஒன்றாக இருப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

புது வருடத்தைத் முன்னிட்டு எல்லா சீன மக்களும், விசேடமாக வூஹான் மக்கள் எல்லா நன்மைகளும் பெற்று, சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகிறேன். நடைபெறுகின்ற இரண்டு கூட்டங்களிலும் வூஹானில் உள்ள திட்டங்களுக்கு மேலும் முதலீடுகளை ஒதுக்குவதன் மூலம் வூஹான் மேலும் மேலும் வளர்ச்சி பெறும் என நம்புகின்றேன்.

**கட்டுரை மூலம்: பீஜிங் றிவியூ சஞ்சிகை**

# மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் விதண்டாவாதம்!

**இ**லங்கையின் தற்போதைய அரசாங்கம் இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனங்களினதும் மதங்களினதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் மோசமாக மீறி வருகிறது என மேற்கு நாடுகளும், ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையும், மேற்கு நாடுகளின் தாளத்துக்கு ஏற்ப ஆடும் பல்வேறு சர்வதேச 'மனித உரிமை' அமைப்புகளும் சர்வசதா வாய் ஓயாமல் பிரச்சாரம் செயது வருகின்றன.

இந்த நிலைமையில், இலங்கையில் மத, இன, சமூக ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பவர்களைக் கைது செய்து இரண்டு வருடங்கள் வரை தடுப்புக் காவலில் வைக்கும் சட்டம் ஒன்றை அரசாங்கம் மார்ச் 9ஆம் திகதி பிறப்பித்திருந்தது. இந்தச் சட்டத்தின்படி, எவராவது வார்த்தைகள் மூலமோ, எழுத்து வடிவிலோ அல்லது காட்சிப்படுத்தல் மூலமோ இன, மத, சமூகங்களுக்கிடையே ஐக்கியமின்மையை ஏற்படுத்தி, மோதல்களைத் தூண்டினால், அவர்களைக் கைது செய்து ஒரு வருட காலத்துக்கு புனர்வாழ்வளிப்பதற்கு வகை செய்யப்பட்டிருந்தது. தேவையேற்படின் புனர்வாழ்வுக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியால் நீடிக்க முடியும்.

இந்த நிலைமையில், இந்தச் சட்டம் மக்களின் உரிமைகளைப் பாதிப்பதாகவும், அதனால் அதை உடனடியாக திரும்பப் பெறுமாறும், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு செயற்படும் 'மனித உரிமைக் கண்காணிப்பகம்' வலியுறுத்தியிருக்கிறது.

மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் வேண்டுதலைப் பார்க்கும்போது, அவர்களின் நோக்கம்தான் என்ன என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில், இலங்கையில் சிறுபான்மை இனங்களினதும் மதங்களினதும் உரிமைகள் மீறப்படக் 4டாது என வலியுறுத்தும் மனித உரிமைக் கண்காணிப்பகம் போன்ற அமைப்புகள், மறுபக்கத்தில் அதை மீறிச் செயற்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் கூறுகின்றன. இது 'தொட்டிலையும் ஆட்டி, பிள்ளையையும் கிள்ளிவிடும்' செயலேயன்றி வேறொன்றுமில்லை.

கொண்டுவரப்பட்டுள்ள சட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அவற்றை நிவர்த்தி செய்யும்படி கோருவதை விடுத்து, முழுச் சட்டத்தையுமே திரும்பப் பெறும்படி கோருவது, அப்பட்டமான விரோத நடவடிக்கையாகும். உண்மை என்னவெனில், ஏகாதிபத்திய சக்திகளின் வளர்ப்புப் பிள்ளைகளான இந்த மனித உரிமை அமைப்புகளுக்கு தமக்குப் பிடிக்காத நாடுகளில் ஏதாவதொரு வகையில் பிரச்சினைகள் இருந்துகொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் விருப்பமாகும்.

**3ம் பக்கத்தொடர்ச்சி...**

வலுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார். புதிய பைடன் நிர்வாகம் ஐரோப்பாவுடனும் நேட்டோவுடனும் உயர்மட்டத்தில் கூட்டாகச் செயல்பட மிகவும் விரும்புவதாகவும் குறிப்பிட்டார். ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 90 சத வீதமானோர் (27 ஐரோப்பிய யூனியன் நாடுகளில் 21 நாடுகள் உட்பட) நேட்டோ நாடுகளில் வாழ்வதாக அவர் குறிப்பிட்டார். "பந்தோபஸ்து மற்றும் பாதுகாப்பு விடயங்களில் நேட்டோவுடனும், புதிய பைடன் நிர்வாகத்துடனும் நெருக்கமாக ஒத்துழைப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளதாக" ஐரோப்பிய சபை மீண்டும் உறுதிப்படுத்தியது. "ஐரோப்பிய யூனியனை இராணுவ ரீதியாகப் பலப்படுத்த வேண்டும்" எனவும் அது கூறியது. இத்தாலிய பிரதம மந்திரி மாரியோ ட்றாகி (Mario Draghi) தனது உரையில், இந்த பலப்படுத்தும் நடவடிக்கை கட்டாயமாக நேட்டோ கட்டமைப்புக்குள் பூர்த்தி செய்யப்படுவதாக இருப்பதுடன், அமெரிகாவுடன் இணைந்ததாகவும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

எனவே, ஐரோப்பிய யூனியனின் இந்த இராணுவ வலுவூட்டல் என்பது, நிச்சயமாக நேட்டோவையும் பூர்த்தி செய்வதாக இருப்பதுடன், அமெரிக்காவின் யுத்ததந்திரத்தையும் பூர்த்தி செய்வதாக இருக்கப் போகின்றது. இந்த யுத்ததந்திரம் உண்மையில் ரஸ்யாவுடனான பதட்டத்தை ஐரோப்பாவில் அதிகரிப்பதுடன், ஐரோப்பிய யூனியனில் அமெரிக்காவின் செல்வாக்கை அதிகரிப்பதாகவும் இருக்கும். இந்த ஆபத்தான, செலவுமிக்க விளையாட்டு, ரஸ்யாவை இராணுவ ரீதியாகப் பலப்படுத்துவதை நோக்கித் தள்ளிவிடும். 2020இல் முழு நெருக்கடிக்கு மத்தியிலும் இத்தாலியின் இராணுவ செலவீனம் ஆஸ்திரேலியாவை முந்திக்கொண்டு உலக அளவில் 13ஆவது நிலையிலிருந்து 12ஆவது நிலைக்குச் சென்றுள்ளது.

(இந்தக் கட்டுரையை இத்தாலிய இடதுசாரிப் பத்திரகையான il Manifesto இல் எழுதிய Manlio Dinucci உலகமயமாக்கல் ஆய்வு நிலையத்தின் ஒரு இணை ஆய்வாளர் ஆவார்)

# இலங்கையில் ஈழப்போர் பற்றிய ஜெர்மன் ஆய்வாளரொருவரின் கருத்து



**மி**கவும் சிக்கலான உலக தொடர்புகளுடன் மிகமோசமான பயங்கரவாதக்குழு ஒன்றினை இலங்கை அழித்தபோதிலும், அதற்கான உரிய பலன் இலங்கைக்குக் கிடைக்கவில்லை. உலகில் வேறெங்கிலும் இல்லாதவாறு, உள்நாட்டில் இடம்பெயர்ந்த 300,000 பேரை மீளக்குடியமர்த்துவதில் இலங்கை வெற்றியடைந்துள்ளது. அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உணவளிப்பதற்கு வேண்டி, பட்டினியால் வாடும் குழந்தைகளென இலங்கையில் கிடையாது என்பது கண்டு கொள்ளப்படாமலேயே உள்ளது. பெருந்தொகையில் மக்கள் அவலம், தொற்று நோய்கள் மற்றும் பட்டினி போன்றவற்றை இலங்கை தவிர்த்துள்ளது என்பதை மேற்குலகம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருக்கின்றது. பயங்கரவாதத்தை ஒழித்த அதேவேளையில், ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்று பார்த்தால், பொறாமை கொள்ளத்தக்க வகையில் சமூக பொருளாதார தரத்தை இலங்கை அடைந்துவிட்டது. எனினும் அதற்கான எந்த அங்கீகாரமும் இலங்கைக்குக் கிடைக்கவில்லை. ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்களின் அங்கீகாரத்தை இலங்கை அரசும், அதன் ஜனாதிபதியும் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றனர். ஆயினும் அது நிராகரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் பொருளாதாரம் இயல்பான செயற்பாடு கொண்டதாக இருக்கின்ற போதிலும், மேற்குலகினால் ஊக்குவிக்கப்படாமல் உள்ளது.

பின்னணி: 27 ஆண்டுகால குருதிதோய்ந்த மோதலுக்குப் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுமையான தோல்வியுடன் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. 'வொண்டர்லாண்ட்டில் அலிஸ்' (Alice in Wonderland) என்ற திரைப்படக்காட்சி போன்று, நாடு எல்லையற்ற அச்சமும் நிச்சயமற்றதுமான ஒரு சூழலிலிருந்து, அமைதிக்கும் முழுமையான தணிவுக்கும் ஒரே இரவில் மாறியது. ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு வந்து, ஒப்பிட முடியாத மகிழ்ச்சியைக் கொண்டாடினர். உணவக உரிமையாளர்கள், போக்குவரத்து நெரிசல் மிகுந்த வீதிகளில் சென்ற அனைத்து வழிப்போக்கர்களுக்கும் தாமாகவே உணவு வழங்கினர்.

அடுத்து வந்த மாதங்களில் சுமார் 300,000 இடம்பெயர்ந்த மக்கள், வாழ்வதற்கு உகந்த நிலைமைகளைக் கொண்டிருக்காத தங்கள் சொந்த நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் திருப்பி அனுப்பப்பட்டனர். ஆனால், சுமார் 27 ஆண்டுகளாக புலிகளின் இரும்பு ஆட்சியின் கீழேயும், ஒரு கூடாரத்தில் இருந்து இன்னொன்றுக்கு மனிதக் கேடயமாகவும், பின்வாங்கிய புலிகளின் பேரம் பேசும் துரும்புச்சீட்டாகவும் அவர்கள் இருந்த போது, அவர்களின் நிலைமைகள் வசதி நிறைந்தாக இருந்திருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## Mathias Keittle

மேலும், புலிகளால் மனித கேடயங்களாக வைத்திருப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்கு திரும்புவதை தடுக்கும் வகையில், புலிகள் அவர்களின் வீடுகளின் கூரைகளையே அகற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சிறுவர் படையினர் (சுமார் 600) புனர்வாழ்வு பெற்று தமது சமூகங்களுக்குத் திரும்பியுள்ளனர். 5,700 சிறுவர்களை புலிகள் இயக்கத்திற்கு சேர்த்துள்ளனர் என யுனிசெ:.ப் ஆவணப்படுத்தியுள்ளது. தேர்ச்சி பெற்ற கொலைகாரர்களாக இருப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்டவர்களில் சிலர் தமக்கு தெரிந்த ஒரே தொழிலான கொலைத் தொழிலுக்கு திரும்பலாமென்ற ஆபத்து இருந்த போதிலும், 11,700 முன்னாள் புலிப் போராளிகளில், 7,000 பேருக்கு மேற்பட்டவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் தமது சமூகங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வடக்கில் புதைக்கப்பட்ட ஆயுதங்களின் மறைவிடங்கள் தொடர்ந்தும் கண்டு பிடிக்கப்பட்டு வருதல் மற்றும் மேற்கு நாடுகளில் உள்ள தமிழ் போராளிகள் தமது பாதுகாப்பான புகலிடங்களிலிருந்து பிரிவினைவாதத்தையும் வன்முறைகளையும் தொடர்ந்து ஊக்குவித்தல் போன்ற நிகழ்வுகளால் ஆபத்து அதிகரித்த வண்ணமுள்ளது. வடக்கில் தொடர்ந்தும் இராணுவம் இருப்பது வெகுளித்தனமாக விமர்சிக்கப்பட்டு வருகின்ற அதேவேளையில், மேற்சொல்லப்பட்ட பின்னணிக் காரணிகள் புறக்கணிக்கப்படுகின்றன. நீதிமன்ற அத்தாட்சித் தேவைகளை பூர்த்தி செய்யவதற்கு எஞ்சியுள்ளவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் போதுமான அளவு இல்லை என்பதால், கைதிகளில் ஒரு பகுதியினர் மட்டுமே விசாரணையை எதிர்கொள்ள நேரிடும். வடக்கின் பொருளாதாரத்தை மீளமைக்க பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்த நோக்கத்திற்காக பெருந்தொகையான பணம் முதலிடப்பட்டு வருகின்றது. போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்களை கைது செய்ய தீவிர பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், இவை அனைத்துமே மேற்கு நாடுகளில் அரிதாகவே குறிப்பிடப்படுகின்றன.

ஓர் ஈவிரக்கமற்ற பயங்கரவாத குழுவை தோற்கடித்ததை விட்டுவிடுவதை விட்டு, ஒரு மோதலில் வெற்றியீட்டும் நடவடிக்கையில் இடம்பெற்றதாக் கூறப்படும் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை கணக்கில் எடுக்க வேண்டும் என்ற வகையில், மோதலின் வெற்றியாளர் வேட்டையாடப்படுவது

என்பது நிட்சயமாக வரலாற்றில் இலங்கை உள்நாட்டு யுத்தம் மாத்திரமாகவே இருக்க முடியும். இரண்டாம் உலகப் போரினைத் தொடர்ந்தோ, அல்லது கொரிய மோதலுக்குப் பின்னரோ, வியட்நாம் யுத்தத்திற்குப் பின்னரோ, முதலாவது வளைகுடாப் போருக்குப் பின்னரோ, ஆப்கானிஸ்தான் அல்லது ஈராக்கில் தொடரும் ஆக்கிரமிப்புக் குறித்தோ இந்தமாதிரியான கோரிக்கைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. குறிப்பிடத்தக்க வகையில் இலங்கையிடமிருந்து பொறுப்புக் கூறலை கோருவதற்காக பலவிதமான சக்திகள் ஒன்றாகத் திரண்டுள்ளனர்.

விஷயத்தின் கவர்ச்சியால் அல்லது வெறுமனே முன்னேறி வரும் மனித இனத்தின் உயர்ந்த இலட்சியங்களின் பண்புகளால் அவர்கள் (பொறுப்புக் கூறலை கோருபவர்கள்) அனைவரும் ஊக்குவிக்கப்பட்டார்கள் என்று சாதாரணமாக இருந்துவிட முடியாது. காரணங்கள்: பல முக்கிய மேற்கத்திய நாடுகளின் மற்றும் சில உயர்குடி தனிநபர்களின் இந்த அணுகுமுறைக்கு ஒரு காரணத்தை சுட்டிக்காட்டுவது என்பது கடினம். மனிதாபிமான நியமங்களுடன் தூய கொள்கை பற்று இருந்திருந்தால், அதன் காரணமாக, இலங்கை அவர்களின் பார்வையில், ஒட்டுமொத்த உலகிலும் ஒரு மோசமான குற்றவாளிபோல் தோன்றும். ஆனால் இது ஒரு வெளிப்படையான காரணமாக இருக்க முடியாது. இலங்கை மேற்குலகைச் சாராத, ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இருப்பதால் தோற்கடிக்க எளிதானது. மோதல் இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்கையில், பல மேற்கத்திய தலைவர்கள் போர் நிறுத்தத்திற்கு கோரிக்கை விடுத்தபோது, தீவிரமான அழுத்தத்திற்கு அசாதாரணமான முறையில் இலங்கை பதில் எதுவுமளிக்காமல் இருந்ததும் இந்த மறுப்பானது ஒரு சங்கடமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தியது.

பெர்னார்ட் குஷ்நெர், டேவிட் மிலிபாண்ட் மற்றும் ஹிலாரி கிளின்டன் (Bernard Kouchner, David Miliband and Hillary Clinton) ஆகிய அனைவரும் போர் நிறுத்தத்தைக் கோரியபோது, அதனை இலங்கை நிராகரித்தது. இரு தரப்பினருக்கும் தாங்கள் கையாண்ட அணுகுமுறைகளுக்கு நல்ல காரணங்கள் இருந்தன. இலங்கை தமிழ் புலிகளை தங்கள் பிடியில் வைத்திருந்ததோடு, மூர்க்கத்தனமான 27 வருட கால கொடூர இரத்தக்களரிக்குப் பின்னர் வெற்றியென்பது கைக்கெட்டும் தூரத்தில் இருப்பதாக ஆசை காட்டியது. பெரும் நிதியையும் கொஞ்சம் அரசியல் பலத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த தமிழ் புலம்பெயர் சமூகத்திடமிருந்து தலையீடு செய்யுமாறு மேற்குலகத் தலைவர்கள் தீவிர அழுத்தத்தின் கீழ் இருந்தனர். ரொரன்ரோ, இலண்டன், மெல்பேர்ண் மற்றும் சிட்னி போன்ற நகரங்கள் தமிழரது பாரிய ஆர்ப்பாட்டங்களால் ஸ்தம்பித்துப் போய்விட்டன. மே மாதம் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்த டேவிட் மிலிபாண்ட்டிடம் மூக்கை நுழைக்காமல் இருக்கும் படியும், சொந்த அலுவலை கவனிக்குமாறும் இலங்கை தலைமைத்துவத்தால் தெளிவாக சொல்லப்பட்டது. முன்னாள் காலனித்துவ குழந்தையால் இவ்வாறு அவமதிக்கப்பட்டதை, அவரால் மன்னிக்க முடியாமல் இருக்கலாம்.

மோதலில் சிக்கியுள்ள பொதுமக்களையும், அத்துடன் பெரும்பாலும் புலிகளின் தலைமையையும் தனது கடற்படை வளங்களைப் பயன்படுத்தி வெளியேற்றம் செய்வதற்கு அமெரிக்கா முன்மொழிந்தது. இது இந்தியாவாலும் இலங்கை அரசாலும் நிராகரிக்கப்பட்டன. இரத்த ஆறொன்று ஓடலாம் என்ற கணிப்புகள் இருந்தபோதிலும், அந்த காலகட்டத்தில் அது உண்மையியேயே நடந்தவிட்டது என எவரும் கூறவில்லை. (அதைத்தொடர்ந்து, இரத்த ஆறொன்று உண்மையில் ஓடியது என்பதை நிறுவுவதற்கு ஆர்வமுள்ள தரப்பினர் மூலம் ஆதாரங்கள் தயாரிக்கப்படுவது தொடங்கியதாக சந்தேகிக்கப்படுகின்றது!). இலங்கை தமிழர்கள் பெருமளவில் தஞ்சம் புகுந்த நாடுகளில் இருந்து போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் வெளிப்பட்டுள்ளன. அகதி அந்தஸ்துக்கான தங்கள் உரிமை கோரல்களுக்கு ஓர் அடிப்படையாக, அப்போதிருந்த வன்முறையைப் பலர் பயன்படுத்தியுள்ளனர்.

யுத்தத்தேவைகளுக்கான நிதிக்கு புலிகள், புலம்பெயர் நாடுகளிலிருந்து பெரும் தொகையான பணத்தைத் திரட்டினர். அவர்களது இலட்சியத்தை முன்னெடுப்பதற்கு இன்று இந்த நிதிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 'கிளின்டனுக்கான தமிழர்கள்' என்ற அமைப்பு கணிசமான பங்களிப்பை ஹிலாரி கிளிண்டனின் தேர்தல் பிரச்சாரத்திற்கு வழங்கினர். இந்த விவகாரம் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, நிதி திருப்பியனுப்பப்படும் வரை நடந்தது. பல மேற்குலக நாடுகளில் உள்ள அரசியல்வாதிகளுக்கு புலிகள் சத்தமில்லாமல் நிதி கொடுத்தும், தொடர்ச்சியாக அவ்வாறு செய்தும் வருகின்றனர். அமெரிக்க வழக்கறிஞரான 'புரூஸ் பெயின்'(Bruce Fein), தமிழ் புலம்பெயர் சமூகத்தால் நிதியளிக்கப்பட்டு வருகிறார். எப்போதும் பலவீனமான தரப்பை வெற்றியாளராக ஆக்குவதற்கு தயாராக இருக்கும் மேற்குலக அரசியலின் தாராளவாத நோக்கத்திற்கு, தமிழ் புலம்பெயர் மக்களின் குறிக்கோள் ஒரு விருப்பமான வெற்றியாளராக இருந்தது. ஊடகத்தையும் கொழும்பில் உள்ள இராஜதந்திர சமூகத்தையும் நிழற்புலிகள் இடைவிடாமல் குறிவைத்துள்ளனர்.

நிதிகள் எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை, தெளிவாக வக்காலத்து வாங்குவோர், வெளிப்படையாக பலவீனமானவர்களின் குறிக்கோளை தூக்கிப்பிடித்து இருக்கும் தாராளவாதப் போக்கு, திகில் கதைகள், உண்மை அல்லது இட்டுக்கட்டல், மேற்கத்தைய ஊடகத்துறையின் சிறப்புரிமை நிலையைப் பாவித்து குறிக்கோளுக்கு ஆதரவளிப்பதற்கு எப்போதும் தயாராக இருந்த அனுதாபம் கொண்ட பத்திரிகையாளர்கள், மேற்கு நாட்டு தாராளவாத அரசியல் தலைவர்களிடையே நிலவிய இலங்கையுடனான அதிருப்தி உணர்வு, சில பிரச்சினைகளை மெதுவான வேகத்துடன் இலங்கை எதிர் கொண்டமை போன்றன மேற்கு நாடுகளிலிருந்த முக்கிய மனிதாபிமான அரசு சாரா நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்கு ஒரு நம்பவைக்கும் கலவையாக இருந்தன. பல மேற்கத்திய பத்திரிகையாளர்கள் இந்த மோதலின் 'தமிழ்நெட்' கருத்தை வெட்கமின்றி ஏற்றுக்கொண்டனர். செல்வாக்கு மிக்க மேற்கத்திய செய்தித்தாள்கள் (இலண்டன் டைம்ஸ், சிட்னி மோர்னிங் ஹெரால்ட், தி ஏஜ்) 'தமிழ்நெட்' மூலம் ஊட்டப்படுகின்ற கருத்தை பரப்புவதற்கு தயாராக இருந்தன.

தமிழ் புலம்பெயர் சக்திகளால் ஓதப்பட்டவற்றை மேற்குலக ஊடகங்களால் கிரகித்த போதிலும், இலங்கை தலைமைத்துவத்திற்கு எதிராக அவ்வளவு நுட்பமானதொரு பிரச்சாரம் முன்னெடுக்கப்படவில்லை என்றும் தோன்றுகிறது. இப்போது களத்தில் போராட்டம் தோற்கடிக்கப்பட்டு விட்டதால், சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்தி பெறுபேறுகளை அடைவது என்பது ஒரு முக்கிய குறிக்கோளாக தோன்றுகிறது. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் ஊகங்களின் அடிப்படையில், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை சுமத்தும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டே உள்ளன. துஷ்பிரயோகங்கள், ஊழல் மற்றும்

சொந்தபந்தங்களுக்கு முன்னுரிமை போன்ற அரசுக்கெதிரான குற்றச்சாட்டுகள் மூலம், இந்த சக்திவாய்ந்த எழுச்சி மேலும் ஊதிப் பெருப்பிக்கப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் முனைப்புக்கொள்ளும் பட்சத்தில், சர்வதேச நீதிமன்றத்தின் முன் இலங்கை தலைவர்களை இழுத்து வருவதற்கு இது ஒரு குறுகிய வழியாக இருக்கும். திரும்பத்திரும்ப சொல்லப்படுதல் என்ற எளிய வழிமுறை மூலம் சில குற்றச்சாட்டுகளுக்கு ஜீவன் கிடைக்கும் என்று சமீபத்திய வரலாறு கூறுகிறது.

மாக்கியவல்லியின் கதை (Machiavellian story) வரி எளிமையானது. "வடபகுதி தமிழ் மக்களை இலக்கு வைத்து, இலங்கை அரசு வேண்டுமென்றே தனது இராணுவத்தைப் பயன்படுத்தி, ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று விட்டது". உரிய பயனை அடைவதற்காக இந்த வரி மீட்கப்படுகின்றது. அதேவேளையில், 27 ஆண்டுகளாக அப்பாவி மக்களை இலக்கு வைத்து, ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்ற விடுதலைப் புலிகளின் கொலைகாரக் குண்டுத் தாக்குதல் பிரச்சாரத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரலாறு, சிறுவர் படைவீரர்களாக ஆயிரக்கணக்கான சிறுவர்களை சேர்த்தல், டசின் கணக்கான மிதவாத தமிழ் தலைவர்கள் படுகொலை, உலகெங்கிலுமுள்ள தமிழர்களிடமிருந்து மில்லியன் கணக்காக கப்பம் பெற்றமை, வடக்கு மாகாணத்திலிருந்து இனச்சுத்திகரிப்பு செய்தமை, யுனெஸ்கோவினால் பாதுகாக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்களை வேண்டுமென்றே அழித்தமை, ஆயிரக்கணக்கானவர்களை வேண்டுமென்றே கீழ்த்தரமான முறையில் மனிதக் கேடயமாகப் பயன்படுத்தியமை, மனிதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றன பூசி மெழுகப்பட்டுள்ளன. அரசு சாரா நிறுவனங்கள், முக்கியமான நபர்கள் மற்றும் மனித உரிமை மீறல்களையும் அரச போர்க் குற்றங்களையும் நிறுவுவதற்கான ஊடகங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வெறித்தனமான பிரச்சாரம் முடுக்கி விடப்பட்டுள்ளதாலேயே புலிகள் செய்தவைகள் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்டுள்ளன.

கொலைகாரப் புலிகளிடமிருந்து வேண்டுமென்றே முழுக்கவனமும் அரசை நோக்கி மாற்றப்பட்டு, இந்த குற்றச்சாட்டுகள் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கொலைகாரப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதற்கு பழிவாங்கும் விதத்தில், இன்று இல்லாவிட்டிலும், பின்னர் ஒரு காலத்தில்



அரசாங்கத் தலைமைத்துவத்தைத் தண்டிப்பதே, இந்தப் பிரச்சாரத்தின் ஒரே குறிக்கோள். முடிந்தவரையில் அடிக்கடி மீட்டப்பட்ட ஒரு பொய், ஒரு ஜீவனைப் பெறும். இது படிப்படியாக சாதாரண இலங்கை மக்களின் மனதில் அசௌகரியத்தையும், சந்தேகங்களையும் ஏற்படுத்துவதோடு, தற்போது அசைக்க முடியாத நிலையிலுள்ள அவர்களது அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை, ஆட்சி மாற்றத்திற்கான சாத்தியங்கள் காலப்போக்கில் உருவெடுக்கும் விதத்தில் தடுமாறச் செய்யலாம்.

அடிப்படையில் தவறான சில வாதங்கள்: போரின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனரா? இந்த மோதலின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனரா? இந்த எண்ணிக்கை 1,000? 7,000 (ஒரு உள்ளக ஐ.நா. ஆவணத்தில் கூறப்பட்டு, பின்னர் மறுக்கப்பட்டது)? இலண்டன் டைம்ஸ் பத்திரிகை 'ஜெர்மி பக்கம்' (Jeremy Page) கூறும் 20,000?

'கோர்டன் வெய்ஸ்' (Gordon Weiss, பொதுவாக விவேகமற்றவர் என்று அறியப்படுபவர்) என்பரால் எழுதப்பட்ட புத்தகத்தில் 40,000 என்று கூறப்பட்டுள்ளதை, தாருஸ்மன் (Darusman) அறிக்கையிலும் (இலங்கையில் பொறுப்புக்கூறல் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை) குறிப்பிடப்படுகிறது? அல்லது அதற்கு மேல். மேற்கு நாடுகளின் அரசாங்கங்களின் தலையீட்டைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் கொல்லப்பட்ட சாதாரண மக்களின் சரியான எண்ணிக்கையை நாங்கள் ஒருபோதும் அறியமுடியாதது போன்றே, சரியான எண்ணிக்கை ஒருபோதும் அறியப்பட முடியாதது. (ஈராக்கில் ஏற்கனவே 500,000 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுவிட்டதாக 2005 இல் 'லான்செட்' (Lancet) என்ற பிரித்தானியா மருத்துவ சஞ்சிகை கூறியது)

ஆனால் ஏதோ சில நிறுவப்பட்ட உண்மைகளை புறக்கணிக்க முடியாது. மோதல்களின் இறுதி வாரங்களில், காயமடைந்தவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் உட்பட கிட்டத்தட்ட 7,000 பேரையும், புலிகளின் கடைசி பிடியில் இருந்து 8,000 இற்கும் அதிகமானவர்களையும், இலங்கை கடற்படையின் உதவியுடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வெளியேற்றியது. வேறு யாராவது காயமடைந்திருந்தால், அவர்களை விட்டுவிட்டு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் 8,000 ஆரோக்கியமான நபர்களைக் கப்பலில் கொண்டு சென்றிருக்க முடியுமா? கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை விட கட்டாயமாக கணிசமானளவில் குறைவாக இருக்க வேண்டும் என்று சமீபகாலத்து பிற மோதல்களின் அனுபவங்களும் பதிவுகளும் தெரிவிக்கின்றன. இது அனுபவத்திலிருந்து பெறப்பட்ட ஓர் உண்மை. மிக முக்கியமாக, மோதலின் முடிவில் இரு தரப்பினரும் இறுதி வரை ஒருவருக்கொருவர் சளைக்காது போராடுவதில் குறியாக இருந்ததால், இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கு நேரம் இருந்திருக்காது. இந்த சூழ்நிலையில், அதிக எண்ணிக்கையில் இறந்தவர்களை அடக்கம் செய்ய புலிகளுக்கு நேரம் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

இலங்கை இராணுவம், பெருந்தொகையிலான சடலங்களைக் கூட ஒருபோதும் காணவில்லை. ஆனால் உண்மை என்னவெனில் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதத்தில், அரசாங்க

பாதுகாப்பு படைகளின் பாதுகாப்பைக் கோருவதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து சுமார் 300,000 பொதுமக்கள் வெளியேறினர். சிவிலியன்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்துவதின் விளைவு அதிகளவிலான தன்னார்வத் தியாகிகளை உருவாக்குவதாக அமையும் என்று சிவிலியன்களிடையே சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஏனைய இராணுவங்களின் அனுபவத்திலிருந்து, பூச்சியம் சிவிலியன் இறப்புக் கொள்கையை அரசு கடைப்பிடித்தது. 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில், வடக்கிற்கு நிவாரணப் பொருட்களை அனுப்பும் நோக்கத்திற்காக கிளிநொச்சியில் சுமார் 121,000 மக்களும், முல்லைத்தீவில் 127,000 மக்களும் உள்ளார்கள் என்ற புள்ளி விபரத்தின் அடிப்படையிலேயே வடக்கிற்கான மனிதாபிமான உதவிகளை ஒருங்கிணைக்கும் குழு (Committee to Coordinate Humanitarian Assistance) செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். மன்னாரில் இருந்து சுமார் ஒரு இலட்சம் பேர் வரையில் புலிகளுடன் சேர்ந்து கொண்டு சென்றிருக்கலாம். முன்னைய ஆண்டில் (2008) சுமார் 60,000 பேர் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தப்பிச் சென்றிருந்தனர் என்பதைக் கருத்தில் எடுத்தும், புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்தால், 2009 ஆண்டு மே மாதம் அரசாங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அகதி முகாம்களில் தங்கியிருந்த எண்ணிக்கைக்கு (300,000) அண்மித்துள்ளது.

அரசு பூச்சியம் சிவிலியன் இழப்புக் கொள்கையைக் கடைப்பிடித்ததால் தான், யுத்தத்தில் விழிப்புணர்வுடன் காலாட்படையை அடிப்படையாக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடித்தது என்பதும் பதியப்பட்டுமுள்ளது. அதிக அழிவுகரமான அணுகுமுறைகளை பின்பற்றியிருக்கக் கூடியபோதிலும், இறுதி மோதல்களில் காலாட்படையினரால் சண்டை செய்யப்பட்டது. இதன் விளைவாக 6,000 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். இராணுவம் வேண்டுமென்றே பொதுமக்களை இலக்கு வைத்து, பெரும் எண்ணிக்கையில் கொன்றார்கள் என்ற குற்றச்சாட்டு, மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்துவதற்கு வசதியான மற்றும் மாக்கியவெல்லின் கதையாக தோன்றுகிறது. பாதுகாப்பு படையினரின் இலக்கு தமிழ் சமூகம்தானா? இது தீவிரத்தன்மையுடன் வெளிப்படுத்தாவிட்டால், முற்றிலும் நிராகரிக்கப்படக் கூடிய ஒரு குற்றச்சாட்டு, அது வெளிப்படுத்தப்படும் தீவிரத்தை விட, வெளிப்படையாக நிராகரிக்கப்படக் கூடும். இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ வாழவில்லை. பெரும்பான்மைச் சமூகமான சிங்கள மக்கள் மத்தியில் பெரும்பான்மையினர் வாழ்கின்றனர். தலைநகரான கொழும்பு மக்கள் தொகையில் 41% பேர் தமிழர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் தமிழ் சமூகம் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் செழுமையான வர்த்தக நிலையங்கள் வைத்திருக்கிறார்கள். கொழும்பில் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தமிழர்கள் வெற்றிகரமான தொழில் வல்லுநர்களாகவும் வர்த்தகர்களாகவும் உள்ளனர். கொழும்பில் உள்ள பல வணிக நிறுவனங்கள் தமிழர்களுக்கு சொந்தமானவை. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள சுகாதார சேவைகளுக்கும் பாடசாலைகளுக்கும் 27 வருடங்களுக்கு மேலாக அரசாங்கம் நிதியுதவியளித்ததோடு, அந்தப் பிரதேசங்களுக்கு உணவுப் பொருட்களையும் அனுப்பி வைத்ததாக ஐ.நா. ஏற்றுக்கொண்டுள்ளது. உண்மையில் வன்னி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும், மாவட்ட தலைநகரங்களில் நிலைகொண்டிருந்த அரசாங்க அதிபர்களால் உணவுத் தேவைகள் தீர்மானிக்கப்பட்டன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகிய நாடுகளின் தூதுவர்களை உள்ளடக்கிய மனிதாபிமான உதவி பற்றிய ஆலோசனைக்குழுவும் (Consultative Committee on Humanitarian Assistance - CCHA), முக்கிய அமைச்சுக்களின் சிரேஷ்ட பிரதிநிதிகளும், வடபகுதிக்கான அத்தியாவசிய பொருட்களின் விநியோகத்தை வாராந்த அடிப்படையில் கண்காணித்து வந்தனர். சனல் 4 ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இந்த சூழ்நிலையில், அரச பாதுகாப்பு படையால் தமிழ் சமூகம் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்வது, இனப் பிளவுகளை மேலும் அதிகரிக்கவும், அரசாங்கத்தின் மீது எதிர்மறையான எண்ணத்தை ஏற்படுத்தும் ஓர் அடிப்படை முயற்சியாகும்.

பாதுகாப்பு படைகள் மற்றும் அதன் தலைமை மீது மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களை சுமத்துவது என்பது சூழ்ச்சித் திட்டமொன்றின் ஒரு பகுதியாக இருப்பதாகத் தோன்றுகின்றது. மேலும் இது மறைந்த இன பதட்டங்களை மோசமாக்குவதுடன், நீடித்திருக்கவும் செய்கின்றது. ஆயுத மோதல் ஒன்றும் பாடசாலை வளவில் விளையாடப்படும் ஒரு விளையாட்டு அல்ல. மாறாக, தடை செய்யப்பட்டுள்ள மிருகத்தனமான குழுவொன்றினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள ஒரு பயங்கரவாத போர். யுத்தத்தில் பொதுமக்கள் காயமடைய வேண்டி வரும். வேறு இடங்களில் இது 'பக்கசேதம்' என்று குறிப்பிடப்படுகின்றது. மேலும் ஆயிரக்கணக்கான பக்கசேதத்தைக் கணக்கிடக்கூடிய பரந்தளவிலான போர்கள் பற்றி நாங்கள் அறிவோம். ஆனால் இலங்கை அரசு பொதுமக்கள் உயிரிழப்பை குறைக்கும் கொள்கையை கடைபிடித்தது. இப்போது இந்த அணுகுமுறையை குறைகூறுவது கண்டிக்கத்தக்கது. இந்தக் கொள்கையைப் கடைபிடித்ததின் காரணமாகவே, புலிகளின் கடைசிப் பதுங்கு குழிகளை பாதுகாப்புப் படையினர் கால்நடையாக அணுகியபோது 6,000 இற்கும் அதிகமானோர் இறப்புகளுக்கு ஆளாகினர்.

ஒருவேளை, இலங்கையில் இன்னமும் பாரபட்சமும் ஒடுக்குமுறையும் இருப்பதாகக் கூறி, மேற்கு நாடுகளுக்குச் சென்ற ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு, அவர்களின் அகதிக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் வரை இந்த போலித்தோற்றத்தைக் கட்டிக்காப்பது சௌகரியமாக இருக்கலாம். வேறு எதனையாவது ஏற்றுக்கொண்டால் அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கு வழிவகுக்கும். மேற்கத்திய நாடுகளில் இருந்து அகதி அந்தஸ்து மற்றும் பயண ஆவணங்கள் பெற்றுக்கொண்ட ஆயிரக்கணக்கானோர், இலங்கைக்கு திரும்பச் சென்று, தங்கள் சொத்துக்களை மீட்டெடுக்கவும் குடும்பத்தை பார்வையிடுவதற்கும் எந்தவித துன்புறுத்தலுக்கும், அவர்கள் ஆளாகவில்லை என்பதும் உண்மை.

**(இக்கட்டுரை இலங்கையிலிருந்து வெளியாகும் The Island பத்திரிகையில் 28.02.2021 அன்று வெளியானது)**

**தமிழில்: வானவில்**

---

*'எவராவது தன்னுடைய வாழ்நாளில் ஒரு பிழையும் செய்ததில்லை என்று நினைத்தால், அவர்கள் தாம் தம் வாழ்வில் புதிய முயற்சிகளை செய்து பார்த்ததில்லை என்று பொருள்'*

---

*'மனிதன் நிச்சயம் ஒரு பைத்தியக்காரன் தான். அவனால் ஒரு புழுவைக் கூட உண்டாக்க முடியாது, ஆனால் டசின் கணக்கில் கடவுள்களை உண்டாக்கிக் கொண்டே இருப்பான்'*

**-ஜன்ஸ்ரைன்**

# தடுப்பூசி ஏகாதிபத்தியம்: சீனா எதிர் மேற்குலகம்

**தடுப்பூசி பாகுபாடு:** பணக்கார நாடுகள் உயிர் காக்கும் தடுப்பூசியை சேமித்து வைத்திருக்கையில் ஏழை நாடுகளும் இந்த நாடுகளிலுள்ள ஏழை மக்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். சீனா இந்த நோயை உருவாக்கும் நுண்ணுயிரியை கட்டுப்படுத்தியதையிட்டும், அது உலகத்துக்கு தடுப்பூசியை வழங்கியது குறித்தும் மேற்கு நாடுகள் விமர்சிக்கின்றன.

எங்கள் உலகம் (Our World) என்ற இணையத்தளம் வழங்கிய தகவலின் அடிப்படையில், உலகத்தில் சீனாவும் ரஸ்யாவுமே கொவிட் – 19இற்கு எதிரான தடுப்பூசியை மக்களுக்கு செலுத்திய முதல் நாடுகளாகும். 2020 டிசம்பர் 15 வரை 1.5 மில்லியன் சீன மக்கள் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுவிட்டனர். அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட, தடுப்பூசி போடும் இயக்கத்தை டிசம்பர் முற்பகுதியில் ஆரம்பித்துவிட்டாலும், டிசம்பர் 15 வரை அரை மில்லியன் மக்களுக்கு மட்டுமே அதைப் போட முடிந்தது.

முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட அல்லது முதல் கட்டத் தடுப்பூசி போடப்பட்ட மக்களைப் பொறுத்தவரை சீனாவே முன்னணியில் உள்ள நாடாக இருக்கின்றது. சீன ஊடகங்களின் தகவலின்படி, ஜனவரி 23 வரை அமெரிக்காவுக்கு அடுத்ததாக சீனா 16 மில்லியன் பேருக்கு தடுப்பூசியைத் செலுத்திவிட்டது. பெப்ருவரி 9 வரை சீனா 40.52 மில்லியன் பேருக்கு தடுப்பூசி செலுத்தியிருக்க, அமெரிக்கா 43.2 மில்லியன் பேருக்கு தடுப்பூசி செலுத்தியிருந்தது.

இது கிட்டத்தக்க கழுத்தோடு கழுத்து என்ற வகையிலான ஒரு ஓட்டம். சீன தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை சீனப் புத்தாண்டின் போது (பெப்.11 — 17) வேகம் குறைந்திருந்தது. பெப்ருவரி 21 வரை 63 மில்லியன் அமெரிக்க மக்கள் தடுப்பூசி பெற்றிருக்க சீனாவில் 53 மில்லியன் பேர் பெற்றிருந்தனர். இப்பொழுது விடுமுறை முடிந்துவிட்டதால் சீனா வேகத்தை அதிகரித்து விரைவாகப் பழைய நிலையை எட்டிப் பிடித்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவும் அமெரிக்காவும் வித்தியாசமான சூழ்நிலைகளை எதிர்நோக்குகின்றன. தற்போதைய போக்கில் அமெரிக்க தனது சனத்தொகைக்கு ஆறு மாதங்களில் தடுப்பூசி ஏற்றி முடிக்க முடியும். சீனாவைப் பொறுத்தவரையில் அதன் 140 கோடி சனத்தொகைக்கும் முழுமையாக தடுப்பூசி



ஏற்றி முடிக்க இரண்டு வருடங்கள் வரை பிடிக்கலாம் என சிலர் கணிக்கின்றனர். எப்படி இருந்த போதிலும் அமெரிக்காவில் உள்ளது போல அல்லாமல், சீனாவில் கொவிட் தொற்று தாழ்ந்த நிலையில் இருப்பதால், சீனாவின் பெருந்தொற்று யுத்ததந்திரம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். “முழுமையான நோய்த் தடுப்பு” இலக்கை அடைவதற்காக சீனா முழுமையான தடுப்பூசித் தேவைக்கு அவசரப்படத் தேவையில்லை.

## *லீ ஸியு ஹின்*

சீனா ஏற்கெனவே பெருந்தொற்று யுத்தத்தில் வெற்றி அடைந்துள்ளதால், அது இப்பொழுது புதிதாகப் பரவுவதைத் தடுப்பதில் கவனம் செலுத்துகிறது.

தடுப்பூசி ஏற்றுவதில் அது முதலில் மருத்துவ ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கிய பின்னர், அடுத்ததாக பொதுமக்கள் தொடர்புள்ள மற்றும் இறக்குமதிப் பொருட்களைக் கையாள்கின்ற தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. மேற்கு நாடுகளில் இருப்பது போலல்லாது, சீனாவில் முதியவர்களுக்கு இந்தத் தொற்று பாதிப்பது குறைவாக இருப்பதால், பொதுத் தொழிலாளர்களுக்குப் பின்னரே அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேற்கு நாடுகளில் பொதுத் தொழிலாளர்களே பட்டியில் தாழ்வான நிலையில் உள்ளனர்.

### உலகளாவிய தடுப்பூசி ஏற்றும் ஓட்டப் பந்தயத்துக்கு யார் தலைமை வகிக்கின்றனர்?

பெப்ருவரி நடுப்பகுதியில் கொவிட் – 19இற்கான அவசர பயன்பட்டு அதிகாரம் வழங்கப்பட்ட பின்னர், சைனோபாம்–பீஜிங், சைனோபாம்–வூஹான், கான்சைனோ மற்றும் சைனோவக் என்ற நான்கு வகைகளுடன் சீனா முன்னணியில் இருந்தது. அமெரிக்கா ஒன்றையும் (மொடேர்னா), அமெரிக்கா — ஜெர்மனி இணைந்து ஒன்றையும் (பைஃசர்.பயோஎன்ரெக்), பிரித்தானியா — சுவீடன் இணைந்து ஒன்றையும் ஒக்ஸ்போர்ட்–அஸ்ராஸெனிகா), ரஸ்யா இரண்டையும் (ஸ்புட்னிக் வி–எபிவக்கொரோனா), இந்தியா ஒன்றையும் (கொவக்ஸின்) கொண்டிருந்தன.

‘எங்கள் உலகம்’ தரவுகளின்படி, பெப்ருவரி 21 வரை கிட்டத்தக்க 98 நாடுகளும் பிராந்தியங்களும் தடுப்பூசிக்கு பெறுவதற்கு கோரிக்கை விடுத்திருந்தன. அவற்றில் பெரும்பாலான — சுமார் 85 நாடுகள் மேற்கத்தைய தயாரிப்பான தடுப்பூசிகள் பெறுவதற்கு கோரியிருந்தன. 16 நாடுகள் வரையில் சீனத் தடுப்பூசி பெறவும், 9 நாடுகள் வரை ரஸ்ய தடுப்பூசி பெறவும் வேண்டியிருந்தன.

எப்படியிருந்த போதிலும், “கோரிக்கை”யின் அர்த்தம் அவர்கள் தடுப்பூசியைப் பெற்றுவிட்டார்கள் என்றோ அல்லது விரைவில் பெறுவார்கள் என்றோ அர்த்தமாகாது. பெப்ருவரி 19இல் கொவிட் – 19 தடுப்பூசி சம்பந்தமான ஒரு கூட்டத்தில் பேசிய ஐ.நாவின் செயலாளர் நாயகம் அன்ரோனியோ குற்ரெர்றெஸ் கொவிட் தடுப்பூசி பங்கிடப்பட்ட முறையை “பண்பாடற்றதும் அநீதியானதும் முறையற்றதும்” என கடுமையாக விமர்சித்திருந்தார். அதாவது அமெரிக்கா, கனடா மற்றும் எட்டு ஐரோப்பிய நாடுகள் உட்பட பத்து நாடுகள் 75 சதவீதமான தடுப்பூசியைப் பெற்றிருக்க, ஏனைய 130

நாடுகள் தனியொரு தடுப்பூசியைத் தன்னும் பெற்றிருக்கவில்லை.

**நாயை நாய் உண்ணும் தடுப்பூசி தேசியவாதம், ஏகாதிபத்தியம் மற்றும் தடுப்பூசி புறக்கணிக்கும் இனவாதம்**

பணக்கார நாடுகள் கூடுதலான தடுப்பூசிகளைப் பதுக்கி வைத்துக்கொண்டு, வறிய நாடுகளுக்கு அதைக் கொடுப்பதற்கு மறுக்கின்றன. ஐரோப்பாவுக்கு எதிராக அமெரிக்காவும் பிரித்தானியாவும், ஏழை மக்களுக்கு எதிராகப் பணக்காரர்கள், நிறம் குறைந்தவர்களுக்கு எதிராக வெள்ளையர்கள் – என ஒரு இனவாத கோபுரம். உணவு விநியோக சங்கிலியிலும் மேற்கத்தைய வெள்ளைப் பணக்காரர்கள் உச்சியில் இருக்க, நிறம் குறைந்த ஏழைகளும், வளர்முக நாடுகளும் எப்பொழுதும் கீழ் நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

மிகவும் குறைந்த அளவிலான மேற்கத்தைய தயாரிப்பு தடுப்பூசியே உலகின் தெற்குப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. “தடுப்பூசி ஏகாதிபத்தியம்”, “இனவாத விநியோகம்” என்ற சொற்பதங்கள் எழுந்தமைக்கு காரணம், பணக்கார நாடுகள் கூடுதலான தடுப்பூசிகளை வாங்கி வைத்துக்கொள்ள, மிகவும் குறைவாகவே வளர்முக நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டமையாகும்.

நியாயமான வகையில் தடுப்பூசி விநியோகத்தை மேற்கொள்வதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் (WHO), உலகளாவிய தடுப்பூசி இணைப்பணி (GAVI) மற்றும் பெருந்தொற்று தயார்நிலைக்கான கூட்டமைப்பு (CEPI) என்பன இணைந்து கோவாக்ஸ் (COVAX) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இது, ஒரு வருடத்துக்குள் 190 நாடுகளில் வாழும் மக்களுக்கு 200 கோடி தடுப்பூசி மருந்துகளை வழங்கிவிட முடியும் என நம்புகிறது. 98 பணக்கார நாடுகள் தடுப்பூசிகளைப் பெறுகின்ற அதேநேரத்தில், 92 வறிய நாடுகளும் அதைப் பெறுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும் என இது விரும்புகிறது.

கோவாக்ஸ் 600 கோடி டொலர்களைத் திரட்டியுள்ள போதிலும், 2021ஆம் ஆண்டுக்கு மேலதிகமாக 200 கோடி டொலர்கள் தேவைப்படுகிறது. கொவாக்ஸ்சுக்கு யார் நிதியளிக்கப் போகிறார்கள், அத்துடன் இதிலிருந்து யார் பயன் பெறப் போகிறார்கள்? கோவாக்ஸ் உருவானதிலிருந்து அது மேற்கு நாடுகளுடனும் அவற்றின் மருந்து நிறுவனங்களுடனும் உலகளாவிய தடுப்பூசி சந்தையில் அவை ஆதிக்கம் செலுத்துவதற்கு உதவுவதற்காக நெருங்கி ஒத்துழைக்கிறது. கோவாக்ஸ்சுக்கு பிரித்தானியா (734 டொலர்கள்) மற்றும் அமெரிக்கா (4 பில்லியன் டொலர்கள்) பெரும் நிதி கொடையாளர்களாக இருக்கின்றன. இந்த நாடுகள் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் மற்றும் அஸ்ராஸெனிகா போன்ற நிறுவனங்களின் தடுப்பூசிகளுக்கு ஆரம்பத்திலேயே அங்கீகாரம் வழங்கி அவை உலகளாவிய தடுப்பூசி வழங்குநர்கள் ஆவதற்கு உதவியுள்ளன.

ஆனால், பெரிய கோரிக்கைகளின் அர்த்தம் அவர்கள் விரைவாக அந்த வேண்டுதல்களை நிறைவேற்றி விடுவார்கள் என்பதல்ல. கோடிக்கணக்கான தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டாலும், முதல் வழங்குதல் மேற்கு நாடுகளுக்கே உத்தவாதப்படுத்தப்படும். ஏனைய நாடுகள் பல மாதங்கள், குறைந்தது ஒரு வருடமாவது காத்திருக்க வேண்டியிருக்கும்.

இந்த நிலைமையில், ஒக்ஸ்போர்ட் – அஸ்ராஸெனெகா (Oxford-AstraZeneca) தடுப்பூசிகளைப் பெறுவதில் பிரித்தானியாவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தால், மற்றைய நாடுகளுக்கு அவற்றை அனுப்புவது கடினமாக இருக்கும்.

டியூக் பல்கலைக்கழகத்தின் (Duke University) உலகளாவிய சௌக்கிய கண்டுபிடிப்பு நிலையத்தின் ஆராய்ச்சியின்படி ஜனவரி 19இல் வெளியிட்ட தகவலில் உயர்ந்த வருமானமுள்ள நாடுகள் 4.2 பில்லியன் தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ள அதேநேரத்தில், கீழ் மத்தியதர மற்றும் குறைந்த வருமானமுள்ள நாடுகள் 700 மில்லியனுக்கும் குறைவான தடுப்பூசிகளுக்கே கோரிக்கை விடுத்துள்ளன. ஒரு நாடு குறைந்தது 1 முதல் 2 வரையான ஆண்டுகளுக்கான விநியோகத்துக்கு முன் கோரிக்கை விடுக்கலாம் என ஒருவர் வாதிடக்கூடும். ஆனால், பெரும்பாலான பணக்கார நாடுகள் தமது தேவைக்கும் மிக அதிகமாக முன் கோரிக்கைகள் விடுத்துள்ளன. உதாரணமாக,

- 450 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் தனது மக்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு முறை தடுப்பூசி ஏற்றக்கூடிய அளவுக்கு 1.85 பில்லியன் தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
- 331 மில்லியன் சனத்தொகை கொண்ட அமெரிக்கா, தனது மக்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு முறை தடுப்பூசி ஏற்றக்கூடிய அளவுக்கு 1.21 பில்லியன் தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
- 25.5 மில்லியன் சனத்தொகை கொண்ட ஆஸ்திரேலியா, தனது மக்கள் ஒவ்வொருவருக்கும் 4.5 தடவைகள் தடுப்பூசி ஏற்றக்கூடிய அளவுக்கு 115 மில்லியன் தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
- மிகவும் அதிகப்படியான கோரிக்கைக்கு உதாரணம் கனடா. 37.7 மில்லியன் சனத்தொகை கொண்ட கனடா, தனது மக்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்பது தடவைகள் தடுப்பூசி ஏற்றக்கூடிய அளவுக்கு 362 மில்லியன் தடுப்பூசிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இதனுடன் உலகின் தெற்குப்பக்க நிலைமையை ஒப்பிட்டுப் பார்த்தால் மிகவும் பயங்கரமானது.

- 6.5 மில்லியன் சனத்தொகை கொண்ட தென் அமெரிக்காவிலுள்ள எல் சல்வடோர் நாட்டை எடுத்துப் பார்த்தால், அந்த நாடு கோரிக்கை விடுத்துள்ள 2 மில்லியன் தடுப்பூசிகளில் மூன்று பேரில் ஒருவருக்கு மட்டுமே ஏற்ற முடியும்.
- 1.32 பில்லியன் சனத்தொகை கொண்ட ஆபிரிக்க யூனியன் அங்கத்துவ நாடுகள் கோரிக்கை விடுத்துள்ள 270 மில்லியன் தடுப்பூசிகளில் ஐந்து பேரில் ஒருவருக்கு மட்டும் அல்லது சனத்தொகையில் 20 சதவீதத்தினருக்கு மட்டுமே தடுப்பூசி ஏற்ற முடியும்.
- 40 மில்லியன் சனத்தொகை கொண்ட ஈராக் கோரிக்கை விடுத்துள்ள 1.5 மில்லியன் தடுப்பூசிகளைக் கொண்டு சனத்தொகையில் 4 சதவீதத்தினருக்கு மட்டுமே தடுப்பூசி போட முடியும்.

ஏன் மேற்கு நாடுகள் மேலதிகமாக தடுப்பூசிகளை வாங்குகின்றன? அவர்கள் தடுப்பூசி சந்தையில் தமது ஏகபோகத்தை நிலைநாட்டும் திட்டமொன்றை வைத்திருப்பதாகச் சில செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு வைத்திருந்தால் சந்தையைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் விலையையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். வருங்காலத்தில் அவர்கள் தமது “மேலதிகமான” தடுப்பூசிகளை வறிய நாடுகளுக்கு கூடுதலான விலைக்கு விற்கவோ அல்லது அதைப் பயன்படுத்தி அரசியல் பேரங்களில் ஈடுபடவோ முடியும்

மறுபக்கத்தில், தடுப்பூசி தேசியவாதம், தடுப்பூசி முற்றுகை, என்பனவற்றின் மூலம் மேற்கத்தைய பொருளாதாரங்கள் டொலர் இல்லாத, வங்கி பரிமாற்ற சக்தி இல்லாத நாடுகளை தடுப்பூசி பெறுவதினின்றும் தடுக்க முடியும். இது மற்றைய நாடுகளுக்கு எதிரான புதிய ஏகாதிபத்திய ஆயுதமாகும்.

ஈரான் மீதான அமெரிக்காவின் சட்ட விரோதமான பொருளாதாரத் தடை காரணமாக ஏற்கெனவே அவர்களால் வாழ்க்கையைப் பாதுகாக்கும் PPE மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்க முடியாத நிலையில், இப்பொழுது தடுப்பூசியையும் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அவர்களிடம் சர்வதேச வர்த்தகத்துக்கான பொது நாணயமான டொலர் இல்லாததுடன், சர்வதேச வங்கிப் பரிமாற்ற சேவையும் தடுக்கப்பட்டிருக்கிறது. அடிப்படையில் சர்வதேச வங்கிப் பரிமாற்றத்துக்கு அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படும் SWIFT இலக்கம் தேவை.

இஸ்ரேல் தனது முழுச் சனத்தொகைக்கும் குறுகிய காத்துக்குள் தடுப்பூசி ஏற்றிட, மறுபக்கத்தில் இனவாத சுவருக்கு அப்பால் உள்ள பாலஸ்தீன மக்கள் இந்த உயிர் காக்கும் தடுப்பூசியைப் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

**அமெரிக்காவில் தடுப்பூசியை வழங்குவதில் சமூக இனவாதம்**

அமெரிக்காவில் பெப்ருவரி மத்தி வரை அண்ணளவாக தினசரி 1.5 மில்லியன் பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது. ஆனால் நகரப்புறங்களிலுள்ள வெள்ளையரல்லாத மக்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதில் பாரபட்சம் காட்டப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன. இதைப் பின்னோக்கிப் பார்த்தால் இதற்கு இனவாதத்தினதும் பொருளாதார ஒடுக்குமுறையினதும் வரலாற்று ரீதியான வேர்கள் இருப்பதைக் காண முடியும்.

லொஸ் ஏன்ஜெல்ஸ் பகுதி தகவல்களின்படி, கறுப்பர்கள், ஆபிரிக்க அமெரிக்கர்கள், லத்தீனியர்கள் ஆகியோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டதைவிட, வெள்ளையர்கள் மற்றும் ஆசியர்களுக்கு வழங்கப்பட்ட தடுப்பூசியின் விகிதாசாரம் தொடர்ந்து அதிகமாக இருந்து வந்துள்ளது.

- அமெரிக்க சனத்தொகையில் 16 வயதுக்கு மேற்பட்ட கறுப்பர்கள் மற்றும் ஆபிரிக்க அமெரிகர்களின் தொகை 9 சதவீதமாக இருந்தபோதிலும், அவர்களில் 5.2 வீதம் பேருக்கே இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது.
- சனத்தொகையில் 46 வீதமாக இருக்கும் 16 வயதுக்கு மேற்பட்ட லத்தீனியர்களில் - 23 வீதம் பேருக்கே தடுப்பூசி போடப்பட்டுள்ளது.



இதற்குப் பிரதான காரணம், தடுப்பூசி போடுவதற்கான வசதியைப் பெறுவதில் வறிய சமூகங்கள் தொடர்ந்து புறக்கணிக்கபட்டு வருகையில், அந்தப் புறக்கணிப்பு வெள்ளையர்களுக்கு இல்லாதிருப்பதுதான்.

இதே நிலைமைதான் சிக்காக்கோவிலும் இருக்கின்றது. கார்டியன் செய்திப் பத்திரிகை தெவிக்கும் தகவலின்படி, தொழில்நுட்பத் தடைகள், போதிய மருந்தகங்கள் இல்லாமை என்பன காரணமாக வெள்ளையர் அல்லாத சிக்காக்கோவாசிகள் தடுப்பூசி போடுவதற்குப் பதிவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அப்பத்திரிகை தெரிவிக்கையில், “சிக்காக்கோ சனத்தொகையில் கறுப்பு இனத்தவர் 30 சதவீதமாகும். ஆனால் கொவிட் தொற்றைப் பொறுத்தவரையில் அவர்களில் 60 வீதமானோரை அது பாதித்திருக்கிறது. அத்துடன், **வைத்தியசாலைகள் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை** மற்றும் சமத்துவமின்மைகள் காரணமாக கொவிட் – 19 இந்தச் சமூகங்களின் ஆரோக்கியத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. **முதற்கட்ட தடுப்பூசி** சுகாதாரத்துறை ஊழியர்கள், நீண்டகால பராமரிப்பு நிலையங்களில் உள்ளோர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கே போடப்பட்டுள்ளது. அவர்கள் **வசதியான பகுதிகளில் வசிப்பவர்களும், வடக்குப் பகுதிகளில் வசிப்பவர்களுமாவர்...**”

ஆபிரிக்க அமெரிக்கர்களைப் பொறுத்தவரையில், Tuskegee (ஆபிரிக்க – அமெரிக்க இன ஆண்கள் மீது அமெரிக்க சுகாதாரத்துறை நடத்திய ஒரு இரத்தப் பரிசோதனை) பரீட்சார்த்தம் என்பது வரலாற்று ரீதியான பொருளாதார மற்றும் மருத்துவ சமத்துவமின்மைக்கு குறிப்பிடக்கூடிய ஒரு உதாரணமாகும். அது இந்த புதிய கொவிட் – 19 விடயத்திலும் தொடர்கின்றது.

கலிபோர்னியா பொதுக் கொள்கை நிறுவனம் 2020 ஒக்ரோபரில் வெயிளிட்ட அறிக்கையின்படி, இந்த மாகாணத்தில் உள்ள ஆபிரிக்க அமெரிக்கர்களில் 29 சதவீதத்தினர் மட்டுமே “நிச்சயமாக” அலலது “பெரும்பாலும்” கொவிட் – 19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். அதேநேரத்தில் அங்கு 54 வீதமான லத்தீனியர்களும், 60 வீதமான வெள்ளையர்களும், 70 வீதமான ஆசியர்களும் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

வரலாற்றுத் தொடர்ச்சி காரணமாகவும், தடுப்பூசி நிலையங்களை அணுகுவதற்கு சரியான வழிகள் இல்லாமை காரணமாகவும், வறிய மக்களைக் கொண்ட இந்தச் சமூகங்களும், வெள்ளையர் அல்லாதவர்களும் தடுப்பூசிக்கான போராட்டத்தில் நிச்சயமான இழப்பாளர்களாகவே இருக்கின்றனர்.

**சீனாவின் உலகளாவிய தடுப்பூசி ஒருமைப்பாடு**

சீனா கோவாக்ஸ்சின் ஆரம்ப தடுப்பூசிப் பட்டியலில் இல்லாதபோதும், மில்லியன் கணக்கான தடுப்பூசிகளை உலகம் முழுவதும் – குறிப்பாக உலகின் தெற்குப் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

சீன வெளிநாட்டு அமைச்சர் வாங் யி அவர்களின் கூற்றுப்படி, சீனா பெப்ருவரி நடுப்பகுதி வரை, சோமாலியா, ஈராக், தென் சூடான், பலஸ்தீனம் உட்பட 53 வளர்முக நாடுகளுக்கு தடுப்பூசிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. 22 நாடுகளுக்கு தடுப்பூசியை ஏற்றுமதியும் செய்துள்ளது. அத்துடன், 10 நாடுகளுடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டுத் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளது. அதேநேரத்தில், உலக சுகாதார அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க,

10 மில்லியன் தடுப்பூசிகளை கோவாக்ஸ்சுக்கு வழங்கியுள்ளது.

'குளோபல் ரைம்ஸ்' பத்திரிகை பெப்ருவரி 14இல் வெளியிட்ட தகவலின்படி, குறைந்தது 40 நாடுகளின் கோரிக்கைகளை ஏற்றோ அல்லது அன்பளிப்பாகவோ, 561 மில்லியன் சீனத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் சில பிரதான நாடுகள் ஆனவை:
பெரு (38 மில்லியன்), மெக்சிக்கோ (35 மில்லியன்), இந்தோனேசியா (122.8 மில்லியன்), பிலிப்பைன்ஸ் (25 மில்லியன் – கூடுதலாக 0.6 மில்லியன் அன்பளிப்பு), துருக்கி (50 மில்லியன்), பிரேசில் (120 மில்லியன்), சிலி (60 மில்லியன்). ஏனைய நாடுகள் கொலம்பியா, உருகுவே, மியன்மார், மலேசியா, தாய்லாந்து, லாவோஸ், மொரக்கோ, எகிப்து, சிசிலீஸ், சிம்பாப்வே, செனகல், ஈகுவடோரியல் கினியா ஆகியனவாகும்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரையில், பிரித்தானியாவுக்கு அடுத்ததாக கூடுதலான அளவு தடுப்பூசி ஏற்றிய நாடான சேர்பியா சீனத் தடுப்பூசியைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய யூனியன் சீனத் தடுப்பூசிகளுக்கு இதுவரை அங்கீகாரம் வழங்காத போதிலும், அந்தக் கூட்டமைப்பில் உள்ள முதலாவது நாடாக ஹங்கேரி சீனத் தடுப்பூசியைப் பெற்றுள்ளது.

சீனத் தடுப்பூசியின் வெற்றியானது, உலகம் பரந்த ரீதியில் அதன் உண்மையான ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. மேற்கு நாடுகள் இது பற்றி கேடுகெட்ட சநதேகமும், பொறாமையும் படுவது ஆச்சரியமான ஒன்றல்ல. சீன தடுப்பூசியின் நம்பகத்தனமை குறித்து அவை ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புகின்றன. (கடந்த வருடம் அமெரிக்கா இவ்வாறுதான் "வூஹானில் உள்ள இராணுவ பரிசோதனைக் கூடத்தில் இருந்துதான் இந்த தொற்றுக் கிருமி பரவியது" எனப் பிரச்சாரம் செய்தது)

எப்படியிருந்த போதிலும், கடந்த இரண்டு மாதங்களில் சீன தடுப்பூசிக்கு ஆதவளிக்கும் வகையில், சில உலகத் தலைவர்கள் ஒளிப்படங்களுக்கு காட்சி கொடுத்து சீனத் தடுப்பூசி போட்டுக் கொண்டனர். அவர்களின் சிலரின் விபரங்கள் வருமாறு:

- சிசிலீஸ் ஜனாதிபதி வேவல் ராம்கலவான்
- துருக்கி ஜனாதிபதி ரேவ்யிப் எர்டோகன்
- இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ வைடோடோ
- ஐக்கிய அரபுக் குடியரசின் பிரதமர் ஸேக் மொகமட் பின் ரஸீட் அல் மக்ரூம்
- ஈகுவடோரியல் கினியா ஜனாதிபதி ரியோடோரோ ஒபியாங்நிகுயிமா எம்பாசோகோ
- சேர்பியன் ஜனாதிபதி அலெக்சாண்டர் வூசிக்
- ஜோர்டான் பிரதமர் பிசேர் அல்– காசோநெஹ்
- சிலி ஜனாதிபதி செபஸ்தியன் பினோரா

மேலும் பல உவகத் தலைவர்களும், அரசாங்க உயரதிகாரிகளும்.

ஏன்? பல நாடுகள் மேற்கத்தைய தடுப்பூசி ஏகாதிபத்தியத்திடமிருந்து தற்காப்புத் தேடுவதுடன், உலகின் தென் பகுதிக்கு சீனத் தடுப்பூசி பொருத்தமாக இருப்பதினாலும் என நிபுணர்கள் கூறுகின்றனர். கடுமையான குளிர்நிலைத் தேவை, தொழில்நுட்பம், அதிக விலை என்பனவற்றைக் கொண்ட பைஃஸர் மற்றும் ஆர்என்ஏ தடுப்பூசிகளுடன் ஒப்பிடுகையில், சீனாவின் தடுப்பூசி விலை மலிவானதும், சுலபமாகப் பெறக் கூடியதுமாகும்.

மேற்கு நாடுகளின் தடுப்பூசி இனவாதம், ஏகாதிபத்தியம், தவறான முகாமைத்துவம் என்பன காரணமாக தடுப்பூசி அபிவிருத்தியிலும், விநியோகத்திலும், தடுப்பூசியைப் பெறுவதிலும் பெரும் குழறுபடிகள் நிகழ்ந்துள்ளது.

மேற்கத்தைய பிரதான ஊடகங்கள் சீன தடுப்பூசியின் நம்பகத்தன்மை குறித்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற அதேவேளையில், பைஃஸர் தடுப்பூசி போட்ட 23 நோர்வேஜிய முதியவர்கள் இறந்தது பற்றி பெரிதாக எதுவும் பேசுவதில்லை.

எந்தவொரு ஊடகமும் விமர்சனபூர்வமான விஞ்ஞான ஆய்வுகளை வெளியிடுவதில்லை. பெப்ருவரி 12 வரை ஏறத்தாழ 43 மில்லியன் பேர் பைஃஸர் அல்லது மொடேர்னா த:ப்பூசியைப் பெற்ற பின்னர் அவர்களில் 16,000 பேருக்கு (10,000 பேரில் 3 பேருக்கு) பாதகமான விளைவுகள் ஏற்பட்டதாகத் தெரிய வந்தது. அமெரிக்காவில் இந்த தடுப்பூசிகளைப் போட்ட 929 பேர் மரணித்துள்ளனர். இந்த மரணங்களுக்கு மேற்படி தடுப்பூசிகளே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டது. காரணங்கள் என்னவாக இருந்தபோதிலும் மேற்கத்தைய ஊடகங்கள் இதுபற்றி மௌனமாக இருந்தன.

**அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்?**

உலகம் முழுவதுமுள்ள இனவாத எதிர்ப்பு, சமூக, சமாதான, சமூக நீதிக்கான இயக்கங்களிலுள்ள செயற்பாட்டாளர்கள் மேற்கத்தைய நாடுகளிலுள்ள இராட்சத மருந்து கொம்பனிகள் தமது நாடுகளிலுள்ள வெள்ளையரல்லாத மக்கள் மீதும், உலகம் முழுவதுமுள்ள வறிய நாடுகள் மீதும் மேற்கொள்ளும் இனவாத மற்றும் தடுப்பூசி ஏகாதிபத்திய செயற்பாடுகளை விமர்சிப்பதை அதிகரிக்க வேண்டும்.

தடுப்பூசி நியாயத்துக்கான ஒரு பரந்தளவிலான இயக்கத்தை ஆரம்பித்து மேற்கு நாடுகளையும் அவற்றின் பல்தேசிய மருந்து கொம்பனிகளையும் பிடித்து பொறுப்புக் கூற வைக்க வேண்டும் என பலர் கோருகின்றனர். அதில் ஆர்வத்துடன் பங்குபற்றி ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்கு முன்வருமாறு சமூகங்களையும், உலகின் தெற்குப் பகுதியையும், சீனாவையும் அழைக்கின்றனர்.
**பிளவுபட்டால் நாம் வீழ்வோம், ஒன்றுபட்டால் நாம் வெல்வோம்!** நாம் ஒன்றுபட்டு விரைவானதும், கூடுதலாக வழங்கக் கூடியதும், கூடுதல் சமத்துவமானதுமான முறையில் உலகம் முழுவதுமுள்ள சமூகங்களுக்கு தடுப்பூசியை வழங்கக்கூடிய உலகளாவிய ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டும்.

(இந்தக் கட்டுரையை எழுதியுள்ள லீ ஸியு ஹின் (Lee Siu Hin) தேசிய குடியேற்ற ஒருமைப்பாட்டு வலையமைப்பு, சீன – அமெரிக்க ஒருமைப்பாட்டு வலையமைப்பு, அத்துடன் இரண்டு நாடுகளினதும் கல்வி மற்றும் சமூக செயற்பாட்டாளர்களை அடிமட்டத்தில் கலந்துரையாட வைக்கும் மின்னணு – மருத்துவ கூட்டமைப்பு (National Immigrant Solidarity Network, the China-U.S. Solidarity Network and e-Medical Alliance) என்பனவற்றின் தேசிய ஒருங்கிணைப்பாளராவார்.
தற்பொழுது அவர் சமூக அடிப்படையிலான நீதியான உலகளாவிய தடுப்பூசி இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்)

---

நிருபரொருவர் ஒரு முறை விஞ்ஞானி ஐன்ஸ்ரைனைப் பேட்டி காண்பதற்காக வந்திருந்தார். அப்போது அந்த நிருபர் ஐன்ஸ்ரைனிடம், "மூன்றாவது உலகப்போர் வந்தால் வல்லரசுகள் எத்தகைய ஆயதங்களைப் பயன்படுத்துவார்கள்?" என்று கேட்டார். அதற்கு, "அது எனக்குத் தெரியாது, ஆனால் நான்காவது உலகப்போர் மூண்டால் எத்தகைய ஆயுதங்களைப் பயன்படுத்துவார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்று விஞ்ஞானி பதிலளித்தார். உடனே அந்த நிருபர் ஆவலுடன் "சொல்லுங்கள்" என்றார். அதற்கு விஞ்ஞானி, "கல், வில்–அம்பு இந்த இரண்டைத் தவிர வேறெதுவும் அப்போது இருக்காது! அப்போது மனிதன் பழைய நிலைக்கு வந்து விடுவான்" என்று சொன்னார்.

# வடக்கில் மிதமிஞ்சிய மணல் அகழ்வால் சுற்றுச்சூழல் ஆபத்து

கிளிநொச்சி – இரணைமடு குளத்திற்கு நீரைக் கொண்டுவரும் கனகராயன் ஆற்றில் அளவுக்கு அதிகமான மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் நிலையில் எதிர்காலத்தில் பாரியளவில் பாதிப்புக்கள் உருவாகும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற 'ஆறுகளை பாதுகாப்போம்' என்ற தேசிய நிகழ்ச்சி திட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, "மனித நாகரீகங்கள் நதிக்கரைகளிலிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. தற்போது இயற்கை மீது மனிதன் செலுத்துகின்ற ஆதிக்கமானது, மனித வாழ்வுக்கு ஒவ்வாத சூழலை உருவாக்கியுள்ளது. குறிப்பாக யாழ் மாவட்டத்தில் இன்று குடிநீருக்கான தட்டுப்பாடு இருக்கின்றது. இதேபோல் வடக்கு மாகாணத்தில் ஏனைய பிரதேசங்களிலும் இன்று குடிநீர் நெருக்கடி காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய வளங்களில் ஒன்றாக காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்பகுதியில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது. இது எதிர்காலத்தில் நீர்த் தேக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும்" என அவர் குறிப்பிட்டார்.

"அரச அதிகாரிகள், அரச திணைக்களங்கள், சுற்று நிருபங்களை வைத்துக்கொண்டு கூட்டங்களையும் மாநாடுகளையும் நடாத்தி, பொலிஸ் இராணுவத்தினரின் பாதுகாப்பினை பயன்படுத்தியும் இதனை கட்டுப்படுத்த முடியும் என்பதை விட, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் தங்களது எதிர்கால சந்ததியை கருத்தில் கொண்டு செயற்படுவார்களெனின் இவ்வாறான இயற்கை மீதான காடழிப்பு, மணல் அகழ்வு என்பன இடம்பெறாது" என அவர் தெரிவித்தார்.

---

**முன்பக்கத் தொடர்ச்சி...**

யுத்தத்தில் அரச படைகள் போர்க் குற்றங்களை இழைத்துள்ளன' என்ற குற்றச்சாட்டை முன்வைத்தே மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன. அதன் மூலம் தம்மை பெரிய மனித உரிமைவாதிகளாகக் காட்டிக்கொள்ள முயல்கின்றன. ஆனால் உண்மை அதுவல்ல.

மேற்கு நாடுகள் உண்மையில் மனித உரிமைகளினதும், ஜனநாயகத்தினதும் பாதுகாவலர்கள் என்றால், முதலில் அமெரிக்கா வியட்நாமிலும், ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், லிபியாவிலும், சிரியாவிலும் வேறு பல நாடுகளிலும் மேற்கொண்ட, மேற்கொண்டு வருகின்ற மனிதப் படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும் முதலில் விசாரிக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடுகளான பிரித்தானியா தனது காலனி நாடுகளில் மேற்கொண்ட கொடுமைகளையும், மேற்கு ஜெர்மனியின் நாஜிகள் மேற்கொண்ட நாசகாரச் செயல்களையும், கனடா தனது நாட்டில் பழங்குடியினருக்கு எதிராக இன அழிப்பு, சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் கூட விசாரிக்க வேண்டும்.

அப்படி தம்மைத் தாமே விசாரிப்பதற்கு இந்த நாடுகள் ஒருபோதும் தயாரில்லை. தாமே வரலாறு காணாத கொடுமைகளை மனித குலத்துக்கு எதிராக இழைத்துவிட்டு, சினனஞ்சிறிய நாடான இலங்கை பாசிசப் பயங்கரவாத பிரிவினைவாத இயக்கம் ஒன்றை பல வருட முயற்சியில் வெற்றிகரமாக ஒழித்துக்கட்டியதைச் சாக்காக வைத்து தமது அந்தரங்க அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போடும் நாடகமே இந்த மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள்.

நாளைக்கே இலங்கை இந்த

ஏகாதிபத்திய – முதலாளித்துவ நாடுகளுக்கு இசைவான ஒரு தளமாக தனது நாட்டைப் பயன்படுத்த அனுமதிக்குமாக இருந்தால், இந்த இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை எல்லாம் அவர்களே குப்பைக் கூடைக்குள் வீசியெறிந்து விடுவார்கள்.


இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை இவர்கள் கொண்டு வருவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, இலங்கை இவர்களது ஆதிக்கத்துக்கு கட்டுப்பட மறுப்பது. இரண்டாவது, ஒரு சுதந்திரமான நாடு என்ற வகையில் சகல நாடுகளுடனும் சமமான நட்புறவைப் பேண விரும்புவது. மூன்றாவது, ஒரு நீண்டகால நட்பு நாடென்ற வகையிலும், தன்னலம் கருதாது உதவி செய்து வருகின்ற நாடு என்ற வகையிலும் சீனாவின் பொருளாதார உதவிகளைப் பெறுவதை விரும்பாதது என்பனவற்றுடன் இன்னொரு காரணமும் இருக்கிறது.

அதாவது, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்த நாடுகளில் இரண்டு நாடுகளான கனடாவிலும், பிரித்தானியாவிலும் கணிசமான புலம்பெயர் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் சிலர் இந்த நாடுகளிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளில் இணைந்து வேலை செய்வதுடன், அங்குள்ள தமிழர்களின் வாக்குகளையும் இக்கட்சிகளுக்குப் பெற்றுக் கொடுக்கிறார்கள். உதாரணமாக, சுமார் 3 கோடி சனத்தொகை கொண்ட கனடாவில் 3 லட்சம் பேர் வரையிலான தமிழர்கள் வாழ்கிறார்கள். அதாவது, மொத்த சனத்தொகையில் 3 வீதம் பேர். எனவே, இந்தத் தமிழர்களின் வாக்குகளைப் பெறும் நோக்கமும் இந்தத் தீர்மானங்களில் உள்ளடங்கி இருக்கிறது.

எது எப்படியிருப்பினும், இத்தகைய தீர்மானங்களை வைத்துக்கொண்டு இலங்கையை மிரட்டலாமே தவிர, தங்களது நோக்கங்கள் எதனையும் அவர்களால் நிறைவேற்ற முடியாது. இந்தத் தீர்மானங்கள் ஐ.நா. மனித உரிமைப் பேரவை கடந்த காலங்களில் பல்வேறு நாடுகள் குறித்து நிறைவேற்றிய பல தீர்மானங்களைப் போலவே கடதாசிகளில் மட்டுமே உயிர் வாழப்போவன. அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

மறுபக்கத்தில் இலங்கை அரசாங்கத்துக்கும் நாம் சொல்ல வேண்டிய சில விடயங்கள் உள்ளன. இலங்கை அரசாங்கம் இலங்கையில் வாழ்கின்ற சகல இனங்களையும், சகல மதங்களையும், சகல பிரதேசங்களையும் சேர்ந்த மக்களது உரிமைகளை மதித்துப் பேணுவதுடன், அவர்களைப் பாகுபாடின்றி சமமாக நடத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலமே இந்த மாதிரியான தேவையற்ற ஏகாதிபத்தியத் தலையீடுகளைத் தவிர்க்க முடியும்.

# இறுதி யுத்த நேரத்தில் இறந்தவர்களின் உண்மையான தொகை என்ன?




**மு**ள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது, விடுதலைப் புலிகள் மற்றும் இராணுவத்தினர் மட்டுமின்றி, கணிசமான பொதுமக்களும் பலியாகியுள்ளார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒவ்வொருவரும் சொல்லும் இறந்த பொதுமக்களின் தொகைதான் ஆளாளுக்கு மாறுபடுகிறது.

இலங்கைத் தமிழ் தேசியர்களும், தமிழ்நாட்டு பிழைப்புவாத தமிழ் தேசியர்களான வைகோ, சீமான் போன்றவர்களும் இறந்த பொதுமக்களின் தொகையை இலட்சக்கணக்கில் சொல்கிறார்கள். அரசியலில் எப்படி வாய்க்கு வந்ததையெல்லாம் பேசுவார்களோ அதுபோல இந்த விடயத்திலும் கண்ணை மூடிக்கொண்டு தமது மன விருப்பப்படி கணக்குச் சொல்கிறார்கள்.

தமிழ் தேசியர்களின் கணக்கை ஒருபக்கம் வைத்துவிட்டுப் பார்த்தாலும், உலக அமைப்பான ஐ.நாவும் இறுதி யுத்த நேரத்தில் நாற்பதினாயிரம் வரையான பொதுமக்கள் இறந்ததாகச் சொல்லியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால் இலங்கை அரசாங்கம் இதை மறுக்கிறது. எனவே ஐ.நா. இந்தப் புள்ளிவிபரத்தை எவ்வாறு பெற்றுக் கொண்டது என்ற விபரத்தை வெளியிடுவது அவசியம். அப்பொழுதுதான் அதன் நம்பகத்தன்மையை எடைபோட்டுப் பார்க்க முடியும். ஏனெனில், நாம் அறிந்த வரையில் இலங்கை அரசாங்கமோ, பொது அமைப்புகளோ, ஐ.நாவோ இறந்தவர்கள் சம்பந்தமாக ஆராய்வோ அல்லது கணக்கெடுப்பு எதுவுமோ நடத்தியதாகத் தெரியவில்லை.

இறுதி யுத்த நேரத்தில் புலிகளால் முள்ளிவாய்க்காலுக்கு கொண்டு செல்லப்பட்ட மக்கள் பெரும்பாலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். இந்த இரு மாவட்டங்களையும் பொறுத்தவரை மொத்தமாக 231 கிராம அலுவலர்கள் பிரிவுகள் உள்ளன. அத்துடன் இரு மாவட்டங்களிலும் மொத்தமாக 2 இலட்சத்து 4 ஆயிரத்து 822 மக்கள் வாழ்கிறார்கள். இதில் நாற்பதினாயிரம் பேர் கொல்லப்பட்ட கணக்கை வைத்துப் பார்த்தால் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சராசரியாக 173 பேர் இறந்திருக்க வேண்டும். அல்லது மொத்தச் சனத்தொகையில் 20 சதவீதம் பேர் வரையில் இறந்திருக்க வேண்டும். எனவே இது ஒரு பாரதூரமான விடயம்.

ஒரு சிறிய நிலப்பரப்பில் (சுமார் 25 சதுர கிலோமீற்றர்) பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருந்தால், இறந்த அவ்வளவு தொகை மக்களின் உடல்களைக் கடந்து இராணுவம் முன்நோக்கிச் செல்லவதென்பது மிகவும் கடினமானதாக இருந்திருக்கும். மேலும் இறந்தவர்களின் உடல்களை அகற்றுவதற்காகவே இராணுவம் இன்னுமொரு படைப் பிரிவை ஈடுபடுத்தியிருக்க வேண்டிய தேவையும் இருந்திருக்கும்.

இதில் இன்னொரு கேள்வியும் எழுகிறது. முள்ளிவாய்க்காலில் ஒரு சிறிய நிலப்பரப்புக்குள்தான் இந்த மக்கள் இருந்திருக்கிறார்கள். இறந்ததாக ஐ.நா. சொல்லும் நாற்பதினாயிரம் பேரும் தனித்தனியாக இருந்து தாக்குதலுக்குள்ளாகி இறந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன, சொந்த பந்தங்களுடன், சக ஊரவர்களுடன்தான் கூட்டமாக இருந்திருப்பார்கள். அப்படிப் பார்த்தால் இறந்த ஒவ்வொருவருக்கும் அருகில் இருந்த குறைந்தது 5 பேராவது காயமடைந்திருப்பார்கள். அதன்படி சுமார் 2 இலட்சம் பேர் காயமடைந்திருக்க வாய்ப்புண்டு. அப்படிக் காயமடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? அந்த நேரத்தில் காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற செஞ்சிலுவைச் சங்க கப்பல் மொத்தம் எத்தனை பேரை ஏற்றிச் சென்றது?

இப்படியான விடை காணப்படாத பல கேள்விகள் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களாகியும் தொடர்கின்றன. இலங்கை அரசாங்கமோ, பொது அமைப்புகளோ அல்லது ஐ.நாவோ இந்த இரு மாவட்டங்களிலும் உள்ள கிராம அலுவலர்கள் பிரிவு வாரியாக இலகுவாக கணக்கெடுப்பு நடத்தி இறந்தவர்களின் தொகையை மதிப்பீடு செய்யலாமே? அதன் மூலம் இறந்தவர்களின் உண்மையான தொகையைக் கண்டறிவதுடன், அவர்களது குடும்பங்களுக்காவது இழப்பீடு வழங்கலாமே? ஏன் இன்னமும் அதைச் செய்கிறார்கள் இல்லை? ஏதாவது உள்நோக்கம் காரணமா?

நிலைமையைப் பார்க்கையில் எல்லாத் தரப்பினரும் இந்தப் பிரச்சினையை மூடுமந்திரமாக வைத்துக் கொண்டு அரசியல் சதுரங்க விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாகத்தான் எண்ணத் தோன்றுகிறது.

**– சண்முகப்பிரியா**